# ශ්‍රී ලංකා සාගර විශ්වවිද්‍යාලය

# இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

# The Ocean University of Sri Lanka

# 2024

## වාර්ෂික වාර්තාව

## வருடாந்த அறிக்கை

## Annual Report

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය,
වෘත්තීය අධ්‍යාපන අංශය

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
தொழிற் கல்வி பிரிவு

**Ministry of Education, Higher Education and Vocational Education.**
**Vocational Education Division**

# வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

# இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

# 2024

## கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, தொழிற்கல்வி பிரிவு

காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு 15.
தொலைபேசி- 011-4346973 தொலைநகல் :011-2525103

மின்னஞ்சல்: oceanuniversity@ocu.lk

இணையத்தளம்: www.ocu.lk

# உள்ளடக்கம்


**01.** நோக்கு,செயற்பணி கூற்று

**02.** ஆளுகைச் சபை/ கல்விசார் சபை மற்றும் பிரதான முகாமைத்துவம்

**03.** துணைவேந்தரின் செய்தி

**04.** மொத்த பகுப்பாய்வு

04.1 இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பம், பரிணாமம் மற்றும் நோக்கங்கள்

04.2 இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கடமைப்பொறுப்புகள் மற்றும் சேவைப் பங்களிப்பு

**05.** பணிப்பாளர் சபை அறிக்கை -செயலாற்றுகை 2024

05.1 கல்விப் பிரிவுகள்

05.1.1 உயர் கல்வி

05.1.2 தொழில்சார் தொழில்நுட்பம்

05.2 பல்கலைக்கழகத்தின் சமூக பொறுப்புகள் - சமூக பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

05.3 பல்கலைக்கழகத்தின் நிருவாகம்

05.4 நிருவாகப் பிரவின் முன்னேற்றம்

05.5 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

**06.** ஆபத்து முகாமைத்துவம்

**07.** கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு - செயலாற்றுகை 2024

**08.** பகுப்பாய்வுடன் கூடிய தொழிற்பாட்டு செயலாற்றுகை 2024

**09.** கணக்காய்வுடன் கூடிய நிதிக் கூற்றுகள்

**10.** கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

**11.** கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கான தெளிவுபடுத்தல்கள்

**12.** நிதிசார் ஆய்வு - 2014 - 2023 - 10 ஆண்டு காலப் பகுதி

# 01. நோக்கு, செயற்பணி கூற்று

## நோக்கு

சமுத்திரம், கடல்சார் மற்றும் மீன்பிடித் துறைகளுக்கான நவீன தீர்வுகளை வழங்குதல்.

## செயற்பணி

பிராந்தியத்தின் சமுத்திர மற்றும் மீன்பிடி கல்விக்கான சிறந்த மையமாதல்.

## பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்

2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் 11 ஆவது பகுதியில் பல்கலைக்கழகம் தாபிக்கு நோக்கங்கள் பின்வருமாறாகும்.

1. மீன்பிடி, கடலியல், கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகளில் பல்கலைக்கழகக் கல்வி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

2. ஏதேனும் பிரதேசத்தில் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மீன்பிடி மற்றும் அது சார்ந்த துறைகளுடன் தொடர்புடைய தொழில்முறை மற்றும் தொழில்நுட்பக் கல்விப் பாடநெறிகளுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.

3. மீன்பிடி மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களிடத்தில் மீன்பிடி, சமுத்திர மற்றும் கடல்சார் துறைகளுக்கு ஏற்புடையதான அறிவைப் பரப்புதல்.

4. மீன்பிடி, கடலியல், கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகளில் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டிற்காக விரிவாக்கப் பாடநெறிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

5. பல்கலைக்கழக நுழைவுக்கான மீன்பிடி மற்றும் அது சார்ந்த துறைகளில் உள்ள பணியாளர்களுக்கு தொழில்முறை மற்றும் தொழில்நுட்பப் பாடநெறிகளை வழங்குதல்.

6. மீன்பிடி, கடலியல், கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகளில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கு மாணவர்களின் திறமை மற்றும் திறமையின் அடிப்படையில் பொறியியல், அறிவியல், தொழில்நுட்பம், தொழில்முறை கல்வி மற்றும் பயிற்சி முறைகளின் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

7. தேசிய தொழிற்கல்வித் தகுதிகளையுடைய நபர்களுக்கான கல்விப் பாடநெறிகளுக்காக ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் மீன்பிடி, மீன்பிடி, கடலியல், கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகளில் அவர்களின் திறமையை மேம்படுத்தவும், கல்வித் தகுதிகளைப் பெறவும் அவர்களுக்கு உதவுதல்.

## 02. ஆளுகைச் சபை

2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் 19 (1) பிரிவின் கீழ் ஆளுகைச் சபை தாபிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **பதவி வழியில் நியமனம்** | | |
| 01. | பேராசிரியர் ஆர்.எம். வசந்த ரத்நாயக்க | தலைவர், துணைவேந்தர் |
| 02. | கலாநிதி எஸ்.யு. பிரியந்த ஜினதாச | பீடாதிபதி, பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம் |
| 03. | கலாநிதி டபிள்யூ.ஏ.ஏ.டி. லங்கா விக்கிரமசிங்க | பீடாதிபதி, மீன்பிடி மற்றும் கடல் அறிவியல் பீடம் |
| 04. | 1. பி.யூ.ஜ. பெரேரா | பணிப்பளார், பயிற்சி (2024 மே மாதம் வரை) - |
| | 2. எல்.ஏ.கே.சி.கே. லியனாரச்சி | பணிப்பளார், பயிற்சி (ப.க) (2024 யூன் மாதம் வரை) - |
| 05. | எஸ்.எம்.எஸ்.டி. குணசிங்க | பணிப்பாளர் (வழங்கல் மற்றும் கொள்முதல்)திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு |
| 06. | எச்.பி. சோமதிலக்க | பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 07. | 1. ஜி.எம்.ஆர்.டி. அப்பொன்சு | பணிப்பாளர் (திட்டமிடல்), கல்வி அமைச்சு (2024 சனவரி வரை) |
| | 2. டபிள்யூ.ஆர்.பி.யு. நுவந்தி | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி), உயர் கல்வி அமைச்சு (2024 பெப்ருவரி தொடக்கம்) |
| 08 | பி.ஆர். அஜித் விஜேசிங்க | பணிப்பாளர் நாயகம்<br>வணிகக் கப்பற் செயலகம் (2024 ஆகஸ்ட் மாதம் தொடக்கம்) |
| 09. | 1.திரு.சனத் பனவென்னகே - பொறியியலாளர் | பணிப்பாளர் நாயகம் / தலைமை நிர்வாக அதிகாரி,<br>நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவனம் (2024 யூன் மாதம் வரை) |
| | 2. திரு.கே.ஆர். உடுவாவல | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம்) திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு (2024 ஆகஸ்ட் தொடக்கம்) |
| 10. | திரு.ஆர்.ஏ.டி.எஸ். ரணதுங்க | மேலதிக செய்லாளர், கடற்றொழில் மற்றும் நீர்வளங்கள் அமைச்சு) |
| 11. | 1. எயார். வயிஸ் மார்ஸல் துணைத் தளபதி திரு பிரசன்ன ரணசிங்க | தலைவர், (2024 மார்ச் மாதம் வரை),<br>தொழில் பயிற்சி அதிகார சபை |
| | 2. திரு.எஸ்.கே. ராஜபக்ஷ | தலைவர், (2024 மே மாதம் வரை),<br>தொழில் பயிற்சி அதிகார சபை |
| 12. | 1. பேராசிரியர் ஜயந்த விஜேரத்ன | தலைவர் , தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (2024 சனவரி மாதம் வரை) |
| | **2.** கலாநிதி என்.சீ.குமாரசிங்க | தலைவர் , தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (2024 யூன் மாதம் தொடக்கம்) |
| 13. | பேராசிரியர் ஜயந்த விஜேரத்ன | தலைவர் , தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்றுவிப்பு அதகார சபை, (2024 சனவரி மாதம் வரை) |
| 14. | கலாநிதி கே.ஏ.லலித்ததீர | பணிப்பாளர் நாயகம்,<br>மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு |
| **நியமனம் செய்த உறுப்பினர்கள்** | | |
| 15. | பேராசிரியர் பீ.ஆர்.டீ.குமாரதுங்க | ஆளுகைச் சபை உறுப்பினர் |
| 16. | கலாநிதி என்.பீ.ஜீ.புஸ்பித்த | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், (2024 யூன் மாதம் தொடக்கம்) |
| 17. | கலாநிதி எஸ்.என்.துஸானி | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், (2024 ஆகஸ்ட் மாதம் தொடக்கம்) |
| 18. | திருமதி ஜே.எம்.வை.எஸ்.ஜே பண்டார | ஆளுகைச் சபை உறுப்பினர் |
| 19. | திரு.ஆரியசீல விக்கிரமநாயக்க | ஆளுகைச் சபை உறுப்பினர் |
| 20. | திரு.ஹேமந்த ரத்நாயக்க | செயலாளர்: பதிவாளர் (2024 யூன் மாதம் வரை) |

# கல்விசார் சபை

2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் 24 (1) உபபிரிவின் கீழ் கல்விசார் சபை தாபிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01. | பேராசிரியர் ஆர்.எம். வசந்த ரத்நாயக்க | தலைவர், துணைவேந்தர் , இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் |
| 02. | கலாநிதி எஸ்.யு. பிரியந்த ஜினதாச | பீடாதிபதி, பொறியியல் மற்றும் முகாமைத்துவப் பீடம் பணிப்பாளர் - அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்படுத்தல் சபை. |
| 03. | கலாநிதி டபிள்யு.ஏ.ஏ.டி. லங்கா விக்கிரமசிங்க | பீடாதிபதி, மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் பீடம், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 04. | 1. பி.யூ.ஜ. பெரேரா | பணிப்பாளர், பயிற்சி (2024 மே மாதம் வரை) - |
| | 2. எல்.ஏ.கே.சி.கே. லியனாரச்சி | பணிப்பாளர், பயிற்சி (ப.க) (2024 யூன் மாதம் தொடக்கம்) - |
| 05. | திரு.ஹேமந்த ரத்நாயக்க | செயலாளர்: பதிவாளர் (2024 யூன் மாதம் வரை) |
| 06. | திரு. எச்.கே.ஆர். துஷார | சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (பரீட்சைகள்) / பணிப்பாளர் - திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி நிலையம், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 07. | கலாநிதி. எம்.பி. குமார | சிரேஷ்ட விரிவுரையாளர், / பணிப்பாளர் - கொள்கைகள் மற்றும் நடைமுறை குழு, மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 08. | 01 கலாநிதி. ஜே.கே. ராஜபக்ஷ | பிரிவுத் தலைவர், கடல்சார் அறிவியல், விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். (2024.மார்ச் மாதம் வரை) |
| | 02 திருமதி. டபிள்யூ.ஏ.ஏ.பி. விஜேசுந்தர | பிரிவுத் தலைவர், கடல்சார் அறிவியல், விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். (2024 யூன் மாதம் தொடக்கம்) |
| 09. | கலாநிதி. என்.பி.ஜி. புஷ்பித | பிரிவுத் தலைவர், மீன்பிடி மற்றும் கடல்சார் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 10. | பொறியியலாளர் திருமதி ஐ.சி. கிரீன்தெகெதர | பிரிவுத் தலைவர், கடற்பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 11. | 1. திருமதி. பி.ஏ.என். இந்திகா | பிரிவுத் தலைவர், நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பம் குறித்த தொழில்நுட்பப் பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். (2024 மார்ச் மாதம் வரை) |
| | 2. கலாநிதி எச்.எம்எஸ்.எம்.விஜேரத்ன | நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பம் குறித்த தொழில்நுட்பப் பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். (2024 மார்ச் மாதம் வரை) |
| 12. | திருமதி. எம்.சி.எல். சொய்சா | பிரிவுத் தலைவர், கடலோர மற்றும் கடல்வள முகாமைத்துவ பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 13. | திருமதி. எச்.டி.எம்.எம். புஸ்ஸல்ல | பிரிவுத் தலைவர், கடல்சார் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம். |
| 14. | கலாநிதி. எச்.பி. ஜயசிறி | சிரேஷ்ட விரிவுரையாளர், சமுத்திர அறிவியல், விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு பிரிவு / பணிப்பாளர் - பட்டப்பின் படிப்பு கல்வி நிலையம், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் |
| 15. | கலாநிதி. எம்.எ.்ப்.எம். ∴பைரோஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் |
| 16. | கலாநிதி. எஸ். நேஷா துஷானி | சிரேஷ்ட விரிவுரையாளர், மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் |
| 17. | கலாநிதி. கே.கே.டி. நுவன்சி | சிரேஷ்ட விரிவுரையாளர், நீர்வாழ் உயிரினங்களின் செய்கை மற்றும் கடல் உணவு தொழில்நுட்பம் குறித்த தொழில்நுட்பப் பட்டப்படிப்பு பிரிவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் |
| 18. | திருமதி. பி.ஏ.எஸ்.ஏ. ரத்ன ஸ்ரீ | விரிவுரையாளர், பொறியியல் மற்றும் முகாமைத்துவப் பீடம் |
| 19. | செல்வி. சமுதிதா கணேபொல | விரிவுரையாளர், பொறியியல் மற்றும் முகாமைத்துவப் பீடம் |

# பிரதான முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் iv ஆவது பகுதியில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் அலுவலர்கள் தொடர்பாக குறிப்பிடப்படுகிறது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் பிரதான முகாமைத்துவம் பின்வருமாறாறகும்.

| | | |
|---|---|---|
| *01.* | *வேந்தர்* | பேராசிரியர் ஒஸ்கா அமரசிங்க |
| | | |
| *02.* | *துணைவேந்தர்* | பேராசிரியர் ஆர்.எம். வசந்த ரத்நாயக்க |
| | | |
| *03.* | *பீடாதிபதி (பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம்)* | *கலாநிதி எஸ்.யு.பிரியந்த ஜினதாஸ* |
| | | |
| *04.* | *பீடாதிபதி (மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல் பீடம்)* | கலாநிதி டபிள்யூ.ஏ.ஏ.டி. லங்கா விக்கிரமசிங்க |
| | | |
| 05. | *பதிவாளர்* | திரு.ஆர்.எஸ்.ஹேமந்த ரத்நாயக்க - (2024.0*6 மாதம் வரை)* |
| | | |
| *06.* | *பணிப்பாளர் - நிதி* | *திரு. பீ.ஏ.எஸ்.நலீன் ஆர் பெரேரா* |
| | | |
| *07.* | *பணிப்பாளர், அனுமதி, அங்கீகார மற்றும் தரச் சான்றுப்படுத்தல் சபை)* | *கலாநிதி எஸ்.யூ. பிரியந்த ஜினதாஸ* |
| | | |
| *08.* | *பணிப்பாளர் (பயிற்சி) ப.க* | *திரு.எல்.ஏ.கே.சீ.கே.லியனாரச்சி* |

# 03. துணைவேந்தரின் செய்தி



இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக எனது நான்கு ஆண்டுகால பதவிக்காலத்தில், பல்கலைக்கழகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கான துணைவேந்தர் செய்தியை, சாதகமான பண்புகளுடன் கூடிய வளர்ச்சி வாய்ப்புகளை உள்ளடக்கி வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமுத்திர பல்கலைக்கழகத்தின் நோக்கத்தையும் பணியையும் உறுதிப்படுத்தும் வகையில், உயர்கல்வி மற்றும் தொழில்முறை தொழில்நுட்பப் பிரிவுகளில் பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரிகளுக்குப் பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்களை வழங்கும் நிகழ்வை இந்த ஆண்டு நடாத்துவதற்கு முடிந்தமை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன்.

உயர்கல்வி, தொலைதூரக் கல்வி மற்றும் பட்டப்பின் படிப்புப் பிரிவுகளின் கீழ், பட்டப் படிப்புகளுக்கான மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், உள்நாட்டுப் பட்டப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை, நிகழ்நிலை முறையின் பயன்பாட்டுடன் மேற்கொண்டமை ஊடாக டிஜிரல்மயப்படுத்தல் உறுதிப்படுத்தப்பட்டது. உயர்கல்வி பட்டப்படிப்பு பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களின் தரங்களுக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன. கடற்படைத் துறையில் ஒரு மைல்கல்லை உருவாக்கும் வகையில், பல்கலைக்கழகத்தின் கடல்சார் பொறியியல் பட்டப்படிப்பின் கீழ் தொடர்ச்சியான விடுவித்தல் சான்றிதழ்கள் (Continuous Discharge Certificate) வழங்கப்பட்டது. இதன் மூலம், வரலாற்றில் முதல் பெண் கடற்படை கேடட் அதிகாரி உருவாக்க முடிந்தமை, நமது பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த ஒரு பெரிய வெற்றியாகும்.

பல்கலைக்கழகத்தின் உயர்கல்விப் பிரிவின் கீழ் செயற்படும் உள்நாட்டுப் பட்டப்படிப்புகளில், கடல்சார் உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் ஆய்வுகள் தொடர்பான புதிய இளங்கலை அறிவியல் பட்டப்படிப்புகளுக்கான பாடநெறிகள் அறிமுகப்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கைக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

உயர்கல்விப் பிரிவில் உள்ள மாணவர்களுக்காக நிரல் வரிசை அமைச்சு மூலம் நடைமுறைப்படுத்தும், "நிபுணதா சிசு சவிய" உதவித்தொகை (Nipuna Sisu Saviya) திட்டத்தை, இந்த ஆண்டு தொடங்கப்பட்டது.

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் தொழில்முறை தொழில்நுட்பப் பிரிவின் வளர்ச்சிக்காக, முதன்முறையாக, முன் அனுபவ அங்கீகார முறையின் (Recognition of Prior Learning) கீழ், தேசிய தொழிற்கல்வித் தகுதிச் சான்றிதழ்கள் யாழ்ப்பாணம் மற்றும் காலி பிராந்திய நிலையங்களால் வழங்கப்பட்டன. இது தொழிலாளர் சமூகத்திற்கான ஒரு தரப்படுத்தப்பட்ட தொழில்முறை திறனை உறுதிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. 2025 ஆம் ஆண்டில் அனைத்து பிராந்திய நிலையங்களின் மூலம் இந்தத் துறையை விரிவுபடுத்துவதை இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தொழில்முறை தொழில்நுட்பப் பிரிவில் உள்ள மாணவர்கள் தொழில் வாழ்க்கையில் சமூகத்திற்குப் பயனுள்ள குடிமக்களாக இலங்கை பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்காக, இந்த ஆண்டு ஒரு தொழில் வழிகாட்டிப் பிரிவு (Career Guidance Unit) நிறுவப்பட்டது.

தொழில்நுட்பத் துறைக்கான அடிப்படை தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக, யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில், கடலட்டைகளை வளர்ப்பதற்கான அடிப்படைத் தொழில்நுட்பம் (Basic Technology of Sea Cucumber Culture) மற்றும் கடல் தாவரங்களை வளர்ப்பதற்கான அடிப்படைத் தொழில்நுட்பம் (Basic Technology of Seaweed Culture) ஆகிய பாடநெறிகள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டன. இலங்கை

பொருளாதாரத்தில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான வழிகளைத் திறக்கும் நோக்கத்துடன் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் செயல்பட்ட ஒரு சந்தர்ப்பமாக இதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை விரிவுபடுத்துவதற்காக, யாழ்ப்பாணத்தில் கல்லுந்தாய் பிரதேசத்தில் அமைந்துள்ள 2 ஏக்கர் அரச காணியை, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்குப் பெற்றுக்கொள்ள முடிந்தமையானது, இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய முன்னேற்றப் படியாகக் கருதப்படுதல் வேண்டும்.

தொழில்நுட்பப் பிரிவுக்குச் சொந்தமான பிராந்திய நிலையங்கள் அமைந்துள்ள நிலங்களின் உரிமையை, பல்கலைக்கழகத்திற்கு கையகப்படுத்துவதில் 75% ஆன பணிகள் இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. இது தொழில்நுட்பப் பிரிவின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பல்கலைக்கழகத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தகுதிவாய்ந்த கணக்காய்வு அறிக்கை, பல்கலைக்கழகத்தின் நிதி முகாமைத்துவம் அரச நிதி கொள்கையின்படி திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. 2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் மூலதன நிதி ஒதுக்கீட்டை அதிகபட்சமாகப் பயன்படுத்தியதன் மூலம், நிதிப் பிரிவு 86% இற்கு அண்மித்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

இந்த ஆண்டில், சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்புகளில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து, திறமையான மற்றும் பயனுள்ள வழிமுறைகளுக்கு ஒழுங்குறுவதற்காக, பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுப் பிரிவு, சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சு மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவுடன் இணைந்து வழங்கிய ஆதரவு குறிப்பிடத்தக்கதாகும்.

2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் நிர்வாக வழிமுறைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்த அயராது பங்களித்த நிர்வாகச் சபை, கல்விச் சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, நிதி குழு மற்றும் அனைத்து பதவியினருக்கும் எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகத்தின் ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்தி, அனைத்து பதவியணியின் முழுமையான அர்ப்பணிப்புடன், 2025 ஆம் ஆண்டில் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்குத் தலைமை தாங்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த செய்தியை நிறைவு செய்கிறேன்.

சிரேஷ்ட பேராசிரியர்
சட்டத்தரணி வசந்த ரத்நாயக்க, Ph.D,
துணைவேந்தர்,
இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.

# 04. *மொத்த பகுப்பாய்வு*

## 04.1 இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பம், பரிணாமம் மற்றும் நோக்கங்கள்



இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது இலங்கை மக்களின் மீன்பிடி, சமுத்திரம் மற்றும் கடல்சார் துறைகளின் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மீன்பிடி, கடல், அறிவியல், கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்கல்வி அறிவை வழங்கும் தேசியப் பொறுப்பை நிறைவேற்றுகிறது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய 8 பிராந்திய நிலையங்களில் தொழில் பயிற்சிப் பிரிவு இயங்கி வருவதுடன், மேலும், இரண்டு பீடங்களைக் கொண்டமைந்த உயர்கல்விப் பிரிவும் இணைந்து, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், இலங்கை மீன்பிடித் துறை, கடற்படை மற்றும் சமுத்திரம் தொடர்பாக ஆராய்ச்சிக்கு தேவையான மனிதவளத்தை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பு கற்கைநெறி வழங்குதல் ஆரம்பமாகியவுடன், 2003 ஆம் ஆண்டில், மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் தொடர்பான விஞ்ஞான இளமாணி கற்கைநெறி, கப்பற் பொறியியல் விஞ்ஞான இளமாணி கற்கைநெறி, கப்பல் கட்டுமானம் மற்றும் கடற்படை கட்டிடக்கலை பட்டப்படிப்பு கற்கைநெறி என்பன அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. படிப்படியாக, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் மற்றும் கலைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும் உயர் தரம் சித்தியடையும் மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1999 இல் நிறுவப்பட்ட மீன்பிடி மற்றும் கப்பற் பொறியியல் நிறுவனச் சட்டம் இரத்து செய்யப்பட்டு, 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 2015 இல் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் முழுமையான பல்கலைக்கழகமாக நிறுவப்பட்டதன் மூலம், மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் மேலும் விரிவடைந்தன.

2023 ஆம் ஆண்டில், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் வகையில் இரண்டு பட்டப்படிப்பு பாடநெறிகளை அறிமுகப்படுத்தியது. அத்துடன், பல்கலைக்கழகத்தின் எதிர்காலப் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கும் வகையில், முதுகலை பட்டப்பின் படிப்பு நிலையம் மூலம் விஞ்ஞான முதுமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிகளும் தொடங்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி நிலையத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறிகள், பல்கலைக்கழகத்தின் உயர்கல்விப் பிரிவின் எல்லையை விரிவுபடுத்தி, இலங்கை பொருளாதார வளர்ச்சிக்கு மனிதவளத்தை வழங்குவதை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டன. இந்த பட்டப்படிப்புகள் சமுத்திர, கடல்சார் மற்றும் மீன்பிடித் தொழில் துறைகளில் திறமையான தொழிலாளர்களின் தேவையை இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டன.

## இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பம், பரிணாமம் மற்றும் நோக்கங்கள்

### உயர் கல்விப் பிரிவு

**மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல்,பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடங்கள்**

- கப்பற் பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டம் - 2003
- மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் - 2003
- கப்பற் போக்குவரத்து மற்றும் வழங்கல் முகாமைத்துவ விஞ்ஞான இளமாணி பட்டம் - 2014
- கரையோர மற்றும் கடற் வளங்கள் முகாமைத்துவ பட்டம் - 2015
- கடல் அறிவியல் விஞ்ஞான இளமாணி பட்டம் - 2019
- மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் - 2020

**தொலை தூர கல்வி பட்டப்படிப்பு நிலையம்**

- வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்
- நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவு தொடர்பான தொழில்நுட்ப வியல்

**பட்டப் படிப்பு கல்வி நிலையம் - 2023**

- கரையோர வளங்கள் மற்றும் பொருளியல் முகாமைத்துவம்

| தொழில்சார் தொழில்நுட்ப பிரிவு |
| --- |
| பிராந்திய நிலையங்கள் |



## 04.2 இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கடமைப்பொறுப்புகள் மற்றும் சேவைப் பங்களிப்பு

### இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கடமைப்பொறுப்புகள்

இலங்கையின் மீன்பிடி, சமுத்திரம் மற்றும் கடல்சார் துறைகளில் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், மீன்பிடி, கடல்சார் அறிவியல், சமுத்திர தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவியல், தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்துதல் மட்டுமின்றி அத்துறைகளில் உள்ள கல்விப் பாடநெறிகள் மூலம் பெறப்படும் உயர்கல்வித் தகுதிகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதிசெய்தலும், வழங்கப்படும் அறிவை நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துதலும் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் - உயர்கல்விப் பிரிவுகளை கொண்டமைந்த பீடங்கள்:

**மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல் பீடம் - தங்கல்ல**

**பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம் - மட்டக்குளிய**

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் தொழில் பயிற்சிப் பிரிவின் கீழ் செயற்படும் பிராந்திய நிலையங்களின் எண்ணிக்கை 08 ஆகும்.

| | |
|---|---|
| **தங்கல்ல** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், மஹவெல வீதி, தங்கல்ல |
| **காலி** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், 284/ஏ, காலி வீதி, பூஸ்ஸ, காலி |
| **பானந்துறை** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், தொம்பகஹவத்த, உயங்கெலே வீதி, பாணந்துறை |
| **மட்டக்குளிய** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், காக்கை தீவு மட்டக்குளி, கொழும்பு 15 |
| **நீர்கொழும்பு** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், வெல்லவீதி, நீர்கொழும்பு |
| **மட்டக்களப்பு** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், நாவலடி, மட்டக்களப்பு |
| **திருகோணமலை** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், கோட் பே, சீனத் துறைமுகம், திருகோணமலை |
| **யாழ்ப்பாணம்** | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், இரண்டாம் குறுக்கு வீதி, குரு நகர், யாழ்ப்பாணம் |

### சேவை பங்களிப்பு

மீன்பிடி, சமுத்திரம் மற்றும் கடல்சார் துறைகளின் மனிதவள மேம்பாட்டுப் பணிகளில், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் பின்வரும் குழுக்களை நிறுவனத்தின் இலக்குக் குழுக்களாகக் கருதி சேவைகளை வழங்குகின்றது.



## இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கீழ் நடைமுறைப்படுகின்ற பிரதேச நிலையங்கள்



## 05. பணிப்பாளர் சபை அறிக்கை -செயலாற்றுகை 2024

சமுத்திரம், கடல்சார் மற்றும் மீன்பிடித் துறைகளுக்கான புதிய தீர்வுகளை வழங்குதல் என்ற தொலைநோக்குடன், பிராந்தியத்தின் கடல் மற்றும் மீன்பிடி கல்வியின் சிறந்த நிலையமாக மாறுதல் என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டு, 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றவும், மீன்பிடி மற்றும் கடல்சார் துறைகளின் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் 2024 ஆம் ஆண்டில் பின்வரும் துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

***05.1. கல்விப் பிரிவுகள்***

***05.1.1. உயர் கல்வி***

***05.1.2 தொழில்சார் தொழில்நுட்பம்***

***05.2. பல்கலைக்கழகத்தின் சமூக பொறுப்புகள் - சமூக பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்***

***05.3 பல்கலைக்கழக நிருவாகம்***

***05.4 நிருவாகப் பிரிவுகளின் முன்னேற்றம்***

***05.5 உள்ளக கணக்காய்வுப் பிரிவு***

,

…………………………......

சிரேஷ்ட பேராசிரியர்<br>
சட்டத்தரணி வசந்த ரத்நாயக்க, Ph.D,<br>
துணைவேந்தர்,<br>
இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.

| | | |
|---|---|---|
| ……………………… | ……………………… | ……………………… |
| *திரு.எல்.ஏ.கே.சீ.கே. லியனாரச்சி பணிப்பாளர் - பயிற்சி (ப.க) இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.* | *கலாநிதி டப்.ஏ.ஏ.டீ.லங்கா விக்கிரமசிங்க பீடாதிபதி மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல் பீடம், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.* | *கலாநிதி எஸ்.யு பிரியந்த ஜினதாஸ பீடாதிபதி, பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.* |

## 05.1 கல்விப் *பிரிவுகள்*

### 05.1.1 உயர் கல்வி




2024 ஆம் ஆண்டில், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் உயர்கல்விப் பிரிவில், ஆறு இளங்கலை பட்டப்படிப்பு பாடநெறிகளும், ஒரு தொழில்நுட்ப இளங்கலை பட்டப்படிப்பு பாடநெறியும் அடங்கலாக கல்வி ஆண்டின் கீழ் நடாத்தப்பட்டன. மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் பீடத்தின் கீழ், மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல், கடல் அறிவியல், நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவு தொழில்நுட்பம் ஆகிய தொழில்நுட்ப பட்டப்படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டன. பொறியியல் மற்றும் கடல்சார் முகாமைத்துவ பீடத்தின் கீழ், கடல்சார் பொறியியல், கடல்சார் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவம், கரையோர மற்றும் கடல்சார் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்படிப்பு கற்கைநெறிகள் நடாத்தப்பட்டன.

இந்த ஆண்டில், திறந்த மற்றும் தொலைதூர கல்வி நிலையம் மூலம், விநியோக சங்கிலி முகாமைத்துவம், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் உணவு தொழில்நுட்பம் ஆகிய இரண்டு தொழில்நுட்ப இளங்கலைப் பட்டப்படிப்புகளும், பட்டநிலை பட்டப்படிப்புப் பிரிவு மூலம், கடற்கரை வளங்கள், பொருளியல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்படிப்பு கற்கைநெறியும் நடாத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் நடாத்தும் பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கான கட்டணங்களும் வசூலிக்கப்படுவதில்லை. கப்பற் பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டம், மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்காக Z-மதிப்பெண் (Z-Score) மற்றும் உளச்சார்ப்பு பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையிலும், ஏனைய பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக உளச்சார்ப்பு பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் உயர்கல்விப் பிரிவில் உள்ள பட்டப்படிப்புகள் உள்ளக ஆட்சேர்ப்புகள் அடிப்படையில் மட்டுமே நடாத்தப்பட்டு வந்த நிலையில், 2023 ஆம் ஆண்டு முதல் வெளியக பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கு கட்டணங்கள் அறவிடப்பட்டு நடாத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை இலக்கம் 1 - மாணவர் பதிவு

| தொடர் இலக்கம் | பீடம் | இளமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | மாணவர் எண்ணிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2017/2018 | 2018/2019 | 2019/2020 | 2020/2021 | 2021/2022 | 2022/2023 | 2023/2024 | 2024/2025 |
| 01 | பொறியியல் மற்றும் முகாமைத்துவம் | கடல்சார் பொறியியலில் இளமாணிப் பட்டம் | 40 | 37 | 47 | 50 | 46 | 56 | 63 | **51** |
| 02. | | கடல்சார் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவத்தில் இளமாணி அறிவியல் பட்டம் | 47 | 53 | 53 | 73 | 83 | 51 | 53 | 54 |
| 03. | | கரையோர மற்றும் கடல்சார் வளங்கள் முகாமைத்துவத்தில் இளமாணி பட்டம் | 40 | 45 | 55 | 65 | 54 | 49 | 54 | 50 |
| 04. | மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல் | மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியலில் இளமாணி அறிவியல் பட்டம் | 41 | 41 | 49 | 59 | 68 | 49 | 53 | 58 |
| 05. | | கடல்சார் அறிவியலில் இளமாணிப் பட்டம் | | | 26 | 23 | 23 | 23 | 35 | 35 |
| 06. | | நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | | | | 40 | 76 | 65 | 70 | 60 |
| 07. | திறந்த மற்றும் தொலைதூர கல்வி நிலையம் | வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பட்டம் | | | | | | | 86 | 69 |
| | | நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | | | | | | | 65 | 33 |
| 08. | பட்டப்பின் படிப்பு கல்வி நிலையம் | கரையோர வளங்கள் மற்றும் பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத்தில் முதுமாணி அறிவியல் பட்டம் | | | | | | | 15 | 8 |
| | | கரையோர வளங்கள், பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | | | | | | | 05 | 2 |



அட்டவணை இலக்கம் 2 - பட்டப்படிப்பை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை

| | பட்டப்படிப்பு கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை | 2017/2018 | மாணவர்களின் எண்ணிக்கை 2018/2019 | 2019/2020 | 2020/2021 | 2021/2022 | 2022/2023 | 2023/2024 | 2024/2025 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | கடல்சார் பொறியியலில் இளமாணிப் பட்டம் | 7 | 13 | 33 | 43 | 37 | 56 | 58 | 51 |
| 02. | கடல்சார் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவத்தில் இளமாணி அறிவியல் பட்டம் | 11 | 15 | 32 | 52 | 82 | 48 | 48 | 54 |
| 03. | கரையோர மற்றும் கடல்சார் வளங்கள் முகாமைத்துவத்தில் இளமாணி பட்டம் | 13 | 16 | 29 | 49 | 48 | 45 | 48 | 50 |
| 04. | மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியலில் இளமாணி அறிவியல் பட்டம் | | | 14 | 16 | 64 | 48 | 47 | 58 |
| 05. | கடல்சார் அறிவியலில் இளமாணிப் பட்டம் | | | 2 | 19 | 14 | 19 | 27 | 35 |
| 06. | நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | | | | 22 | 71 | 64 | 70 | 60 |
| 07. | **திறந்த மற்றும் தொலைதூர கல்வி** | | | | | | | | |
| | வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பட்டம் | | | | | | | 76 | 66 |
| | நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | | | | | | | 65 | 31 |
| 08. | **பட்டநிலைப்பின் படிப்பு கல்வி நிலையம்** | | | | | | | | |
| | தத்துவ முதுமாணி | | | | | | | 1 | 1 |
| | கலாநிதி | | | | | | | 1 | 1 |
| | கரையோர வளங்கள் மற்றும் பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத்தில் முதுமாணி அறிவியல் பட்டம் | | | | | | | 10 | 8 |
| | கரையோர வளங்கள், பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | | | | | | | | 2 |

### 05.1.1.1 நிறுவன பயிற்சிக்காக மாணவர்களை ஈடுபடுத்தல்.

மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியலில் இளமாணி பட்டப்படிப்பை முடித்த மாணவர்கள், பாடநெறியின் முடிவில் நிறுவனப் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். இதன்மூலம் மாணவர்களுக்கு துறை சார்ந்த பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிடைக்கின்றது. இந்த ஆண்டு, மாணவர்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நிறுவனப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

## 05.1.1.2 கல்விசார் பதவியணியின் தரம்

**அட்டவணை இலக்கம்3 - இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் மீன்பிடி மற்றும் கடல் அறிவியல் பீடத்தின் ஆசிரியர் குழாம்**

| *சிரேஷ்ட விரிவுரையாளர்கள்* | | |
|---|---|---|
| 01. | கலாநிதி எம். எ.ப். எம். .பைரோஸ் | B.Sc. (Ruhuna,SL), M. Phil (Ruhuna,SL), D. Sc (Shizuoka, Japan) |
| 02. | கலாநிதி எம். பி. குமார | B.Sc. (Hons), (Ruhuna, SL), Ph. D (Edinburgh Napier, UK) |
| 03. | கலாநிதி டபிள்யூ. ஏ. ஏ.டி.எல். விக்ரமசிங்க | B.Sc. (Hons) (Ruhuna, SL), M.Sc. (Vrije, Belgium) Ph.D. (ICAR-CIFE, Mumbai, India) |
| 04. | கலாநிதி ஜே.கே. ராஜபக்ஷ | B.Sc. in Physical Science (Peradeniya, SL), M.Sc. (Gothenburg, Sweden), Ph.D. (Peradeniya, SL) |
| 05. | கலாநிதி எஸ்.என். துஷானி | B.Sc. (Hons), (Ruhuna, SL), M.Sc. (UiT, Norway), Ph. D scholar (UiT, Norway) |
| 06. | கலாநிதி எஸ்.பி.யு. ஜினதாச | B.Sc. in Special in Geology (Peradeniya, SL), (MPhil) Applied Geophysics (Open University SL), Doctor of Philosophy Physical Oceanography (Ruhuna, SL) |
| 07 | கலாநிதி. என். பி. ஜி. புஷ்பித | B.Sc. (Hons), (Ruhuna, SL) MPhil (Ruhuna, SL), M.Sc. (KMOU Korea), Ph.D. (Ruhuna, SL) |
| 08 | கலாநிதி. எச்.எம்.எஸ்.எம். விஜேரத்ன | B.Sc in Fisheries and Marine Sciences (Ruhuna SL), M.Sc. (South Korea), PhD (South Korea) |
| 09 | திருமதி. கலாநிதி. கே.கே.டி. நுவான்சி | Ph.D in Aquaculture (India), M.Sc (India), B.Sc (Hons) Ruhuna |
| 10 | திருமதி. டபிள்யூ.ஏ.ஏ.பி. விஜேசுந்தரா | B.Sc.Sabaragamuwa University), Post Graduate (Colombo SL), M.Sc (Colombo SL) |

| *விரிவுரையாளர்கள்* | | |
|---|---|---|
| 01. | திருமதி.பி.ஏ. என். இந்திகா | B.Sc.(Hons),(Ruhuna,SL), M.Sc.(PNU,Korea) M.Sc. (Janardhanapuram, SL) |
| 02. | திரு.டபிள்யூ. ஏ. ஏ. யு.குமார | B.Sc. (Hons), (Ruhuna, SL), M.Sc. (James Cook, Australia) |
| 03. | திரு.டி.டபிள்யூ.எஸ். வர்ணசூரிய | B.Sc. (Hons), (Ruhuna, SL), M.Sc. (Colombo, SL) |

**அட்டவணை இலக்கம் 4 – இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் கடல்சார் பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடத்தின் ஆசிரியர் குழாம்**

| *சிரேஷ்ட விரிவுரையாளர்கள்* | | |
|---|---|---|
| 01. | கலாநிதி எச்..பி. ஜெயசிறி (ஒப்பந்த அடிப்படையில்) | B.Sc. in Biological Science (Ruhuna, SL), M.Sc. (Gothenburg, Sweden), Ph.D. (CIFE, Mumbai, India) |
| 02 | பொறியியலாளர் ஈ.பீ.ரோஹன் | B.Sc. in Engineering (Ruhuna,SL), MPhil (Ruhuna,SL), Doctor of Engineering (Ruhuna,SL) |
| 03 | திருமதி எச். டி.எம்.எம். புஸ்ஸல்ல | B.Sc. (Hons) in Business Administration (Peradeniya, SL), M.Sc. (Sri Jayawardhanapura,SL) |
| 04 | திரு. டி.பி.ஜி.என். அசந்த டி அல்விஸ் | B.Sc. (Hons) in Transport & Logistics Management (Moratuwa, SL), M.Sc. (Korea Maritime and Ocean University, Korea) |
| *விரிவுரையாளர்கள்* | | |
| 01. | திருமதி எம்.சி.எல். சொய்ஸா | B.Sc. in Fisheries Science (National Institute of Fisheries & Nautical Engineering, SL), M.Sc. in Aquaculture and Fisheries Management at Kelaniya, SL), M.Sc. (Korea Maritime and Ocean University, Korea) |

| | | |
|---|---|---|
| 02. | திருமதி ஈ.ஏ.கே.கே.அமரசேகர | B.Sc. in Fisheries Science (National Institute of Fisheries & Nautical Engineering, SL), M.Sc. in Aquaculture and Fisheries Management (Kelaniya, SL) |
| 03. | திருமதி எச்.ஏ.பி.எஸ். ஜெயபால | B.Sc. in Degree (Open SL), M.Sc. in Fisheries & Aquatic Resources Management (Sri Jayawardhanapura, SL), M.Sc. (Korea Maritime and Ocean University Korea) |
| 04. | திருமதி பி.ஏ.எஸ்.ஏ. ரத்ன ஸ்ரீ | B.Sc. (Special) in Aquatic Science (Sri Jayawardhanapura, SL), M.Sc. in Environmental Science (Open University, SL) |
| 05. | திருமதி ஜி.ஏ.எஸ். சத்துரி கணேபொல | Master of Business Administration, University of Colombo, Bachelor of Business Administration in Business Economics, University of Colombo Passed Finalist in Charted Institute of Management Accountants (CIMA) |
| 06. | திருமதி டப் பீ.டப் அஞ்சலிகா | B.A. in Economics (Special) Degree University of Sabaragamuwa |
| 07 | திருமதி ஐ.சி. கிரிந்தகெதர | B.Sc. in Engineering (Peradeniya,SL), M.B.A. (Moratuwa,SL) |
| 08 | செல்வி திலினி நவோத்யா விஜேரத்ன | B.Sc. (Ocean University SL), |

### 05.1.1.3 கல்வி/கல்விசாரா பதவியணியால் நடாத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

பல்கலைக்கழகத்தின் கல்வி/கல்விசாரா பதவியணியால் அட்டவணைப்படுத்தப்பட்ட வார சஞ்சிகை கட்டுரைகள், அட்டவணைப்படுத்தப்படாத வார சஞ்சிகை கட்டுரைகள் என்பன வெளியிட்டுள்ளனர். பதவியணியின் அனைத்து வெளியீடுகளின் சுருக்கம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5: கல்விசாரா ஊழியர்களின் வெளியீடுகள்

| பீடம் | | வெளியீடுகளின் தொகுதி | | எண்ணிக் கை | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு | வெளிநாடு |
| மீன்பிடி மற்றும் சமத்திர அறிவியல் பீடம் | 1 | மின்னணு இதழ்கள் உட்பட, அட்டவணைப்படுத்தப்பட்ட வார சஞ்சிகை வெளியீடுகளின் எண்ணிக்கை | | | 6 |
| | 2 | மின்னணு வார சஞ்சிகைகள் உட்பட, அட்டவணைப்படுத்தப்படாத வார சஞ்சிகை வெளியீடுகளின் எண்ணிக்கை | | | |
| | 3 | கருத்தரங்கு பணி குறிப்புகள் | 3.1 முழுமையாக வெளியிடப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை | | 2 |
| | | | 3.2 சுருக்கங்களின் எண்ணிக்கை | 25 | 12 |
| | 4 | வெளியிடப்பட்ட நூல்களின் அத்தியாயங்கள் | | | 3 |
| | 5 | சிறப்புத் துறைகளில் வெளியிடப்பட்ட நூல்கள்/பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை | 5.1 வெளியீட்டாளரால் | | |
| | | | 5.2 வெளியீட்டாளரால் | | |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம் | 1 | மின்னணு இதழ்கள் உட்பட, அட்டவணைப்படுத்தப்பட்ட வார சஞ்சிகை வெளியீடுகளின் எண்ணிக்கை | | | **2** |
| | 2 | மின்னணு வார சஞ்சிகைகள் உட்பட, அட்டவணைப்படுத்தப்படாத வார சஞ்சிகை வெளியீடுகளின் எண்ணிக்கை | | **1** | **2** |
| | 3 | கருத்தரங்கு பணி குறிப்புகள் | 3.1 முழுமையாக வெளியிடப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை | **2** | **2** |
| | | | 3.2 சுருக்கங்களின் எண்ணிக்கை | **10** | |
| | 4 | வெளியிடப்பட்ட நூல்களின் அத்தியாயங்கள் | | | **1** |
| | 5 | சிறப்புத் துறைகளில் வெளியிடப்பட்ட நூல்கள்/பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை | 5.1 வெளியீட்டாளரால் | | |
| | | | 5.2 வெளியீட்டாளரால் | | |

**அட்டவணை இலக்கம். 6: கல்விசாரா பதவியணியால் வெளியிடப்பட்ட வெளியீடுகள்**

| **நிறைவேற்று பதவியணி** | | **வெ ளியீடுகளின் தொகுதி** | | **எண்ணிக் கை** | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளிநாடு |
| | 3 | கருத்தரங்கு பணி குறிப்புகள் | 3.1 முழுமையாக வெளியிடப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை | **2** | |
| | | | 3.2 சுருக்கங்களின் எண்ணிக்கை | | |

## 05.1.1.4 முன்னேற்றம்

- 2024.11.20 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது பட்டமளிப்பு விழாவில் 239 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.





| | பீடம் | பட்டப் படிப்பு கற்கைநெறி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பொறியியல் மற்றும் முகாமைத்துவம் | கடல்சார் பொறியியலில் இளமாணிப் பட்டம் | 29 |
| | | கடல்சார் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவத்தில் இளமாணி அறிவியல் பட்டம் | 69 |
| | | கரையோர மற்றும் கடல்சார் வளங்கள் முகாமைத்துவத்தில் இளமாணி பட்டம் | 46 |
| 2 | மீன்பிடி மற்றும் கடல்சார் விஞ்ஞானம் | மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியலில் இளமாணி அறிவியல் பட்டம் | 63 |
| | | கடல்சார் அறிவியலில் இளமாணிப் பட்டம் | 17 |
| | | நீர்வாழ் உயிரின மற்றும் கடல் உணவுத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | 15 |
| மொத்தம் | | | **239** |

❖ தொழிற்கல்விக்காக நுழைகின்ற மாணவர்களின் பொருட்டு தொழில்சார் வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், வேலையில்லாத இளைஞர்களைத் திறன் பயிற்சி மூலம் வலுவூட்டப்பட்டு தொழிற்கல்வியை நோக்கி ஈர்க்கவும், " நிபுணதா சிசு சவிய " உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் உயர் கல்விப் பிரிவில் உள்ள 160 மாணவர்களுக்காக 2024 ஆம் ஆண்டு முதல் "நிபுணதா சிசு சவிய" உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

❖ நீர்வாழ் உயிரினச் செய்கை மற்றும் கடல் உணவு தொழில்நுட்பம் தொடர்பான தொழில்நுட்ப இளமாணி பட்டம் (B.Tech in Aquaculture and Seafood Technology) ஆய்வகம் 2024 யூலை மாதம் 18 ஆம் திகதி தொடங்கப்பட்டது..



❖ இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தில் அங்கத்துவம் பெறுவதற்காக, பல்கலைக்கழக கடல்சார் பொறியியல் பட்டப்படிப்பின் பாடத்திட்டத்தை தரப்படுத்துவதற்கான ஒரு செயலமர்வு, அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்புடன் 2024 யூன் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்றது. இந்த செயலமர்வில் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள மொறட்டுவ, கொத்தலாவல பாதுகாப்பு, திறந்தநிலை, பேராதனை, களனி மற்றும் சினெக் பல்கலைக்கழகங்கள் பங்களிப்புச் செய்தன. இத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு கப்பல் கட்டும் தளம், மாஸ்டர் டைவர்ஸ், இலங்கை கடற்படை, இலங்கை மின்சார சபை மற்றும் ஜோன் கீல்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் கலந்துகொண்டன.

❖ இலங்கை சமுத்திர பல்கலைக்கழக வரலாற்றில் கடல்சார் பொறியியல் துறையில் ஒரு வெற்றிகரமான முன்னோடி நடவடிக்கையாக, பல்கலைக்கழக கடல்சார் பொறியியல் பட்டப்படிப்பின் முதல் பெண் கேடட் அலுவலர் நியமிக்கப்பட்டார். இது கடற்படைத் துறையில் ஒரு மைல்கல் ஆகும்.



❖ கடல்சார் பல்கலைக்கழகத்தின் முதலாவது வெளிநாட்டு மாணவர்களின் பங்குபற்றலுடன் கூடிய கல்வி அறிவு பரிமாற்ற நிகழ்ச்சிதிட்டம், கொரியா கடல்சார் பல்கலைக்கழகத்துடன் (Korea Maritime Ocean University) இணைந்து கடலோர மற்றும் கடல்சார் வளங்கள் முகாமைத்துவ துறை மாணவர்களுடன் இணைந்து 2024 யூலை 24 தொடக்கம் 30 வரை நடைபெறும்.

❖ மீன்பிடி மற்றும் சமுத்திர அறிவியல் பீடத்தின், கடற்றொழில் மற்றும் சமுத்திர கற்கைகள் பிரிவு மூலம், சூரிய உலர்த்திகளைப் பயன்படுத்தி கடற்றொழில் சமூகத்திற்கும் நுகர்வோருக்கும் ஆரோக்கியமான மற்றும் தரமான உலர்ந்த கடல் உணவை உற்பத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் தேவையான சூரிய உலர்த்திகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.



❖ கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியல் பீடத்தின் கடற்றொழில் மற்றும் சமுத்திர கற்கைகள் பிரிவு மூலம், தென் கடலோரப் பிரதேசத்தின் சுற்றுலா விடுதிகளை இணைத்து கடல் சூழல் அமைப்பை பாதுகாக்கும் திட்டமாக, கடல் புற்களை (Sea Grass) வளர்த்து விரிவாக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

❖ கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியல் பீடத்தின் கடற்றொழில் மற்றும் சமுத்திர கற்கைகள் பிரிவு, அக்வாபோனிக் தொழில்நுட்பத்தின் மூலம் நிலையான மீன் மற்றும் பயிர் வளர்ப்புக்கான கருவிகளை உருவாக்குவதை அறிமுகப்படுத்தி, சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.



❖ சமுத்திர அறிவியல் கற்கைகள் துறை மூலம், உலக சமுத்திர தினத்தை 2024 ஆம் ஆண்டு யூன் 7 அன்று கொண்டாடும் வகையில், "Catalyzing Action for Our Ocean & Climate" என்ற கருப்பொருளின் கீழ் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில், சமுத்திர பாதுகாப்பு மற்றும் கடல்சார் துறை தொடர்பான வாய்ப்புகளை அடையாளம் காண்பது மற்றும் கடற்கரையைப் பாதுகாப்பதற்கு மேறகொள்ள வேண்டிய பணிகள் குறித்து மாணவர்கள் மற்றும் பதவியணிக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

❖ கடல் உயிரி தொழில்நுட்ப பட்டப்படிப்பின் (B.Sc. in Marine Biotechnology) பாடத்திட்டத்தை வடிவமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

**சர்வதேச ஒத்துழைப்புகள்**

❖ அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நொட்டர்டாம் பல்கலைக்கழகத்திற்கும் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் 2024 முதல் 2028 வரையிலான ஐந்து வருட காலப்பகுதியில் வங்காள விரிகுடா கடல் எல்லையில் கடல் மற்றும் வளிமண்டல அறிவியல் தொடர்பான ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2024.06.12 அன்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் கல்வி மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் பட்டநிலைபின்படிப்பு மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவது நோக்கமாக உள்ளது. இந்த திட்டத்திற்காக நொட்டர்டாம் பல்கலைக்கழகம் மற்றும் வொஷிங்டன் பல்கலைக்கழகம் (USD) 60,000 அமெரிக்க டொலர் மதிப்பிடப்பட்ட தொகையில் (USD) 60,000 நிதி உதவி வழங்கப்படுகிறது.

❖ ஒத்துழைப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக சீன அறிவியல் அகாடமியின் கீழ் உள்ள தென் சீன கடல்சார் அறிவியல் நிறுவனத்துடன் பல்கலைக்கழகம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MOU) கைசாத்திட்டுள்ளது. இந்த முன்மொழிவு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

- சீனாவில் உள்ள சன் யட்-சென் (Sun Yat- Sen University) பல்கலைக்கழகத்துடன் கல்வி மற்றும் ஆராய்ச்சி உறவுகளுக்கான ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

## 05.1.2 தொழில்சார் தொழில்நுட்பம்




இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொழில்சார் நுட்பப் பிரிவு பிராந்திய அளவில் நிறுவப்பட்ட 8 நிலையங்களைக் கொண்டுள்ளது. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமைகள் கொண்ட கற்கைநெறிகளை பிராந்திய நிலையங்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதன் மூலம், பரந்த அளவில் மாணவர்களின் தொழில் கல்வியை மேம்படுத்துவது மேற்கொள்ளப்படுகிறது.

**05.1.2.1.** 2024 ஆம் ஆண்டில் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பப் பிரிவின் 08 பிராந்திய கல்லூரிகளின் கற்கைநெறி முன்னேற்றம்-

அட்டவணை இலக்கம் 07: 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை

| பிரிவு | திறன் அங்கீகரிக்கப்பட்ட மட்டம் -தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ)/ தேசிய அல்லாத தொழில்சார் தகைமைகள் (NNVQ) | ஆட்சேர்ப்புச் செய்த மாணவர்களின் எண்ணிக்கை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | முழுநேரம் | | பகுதிநேரம் | | |
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் செய்கை | NVQ | 204 | 122 | 17 | 8 | 351 |
| | NNVQ | 374 | 2 | 31 | 19 | 426 |
| கடல்சார் மற்றும் கடல்சார் அறிவியல் | NVQ | 294 | 137 | 0 | 0 | 431 |
| | NNVQ | 82 | 0 | 0 | 0 | 82 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | NVQ | 7 | 26 | 0 | 0 | 33 |
| நடைமுறை பயிற்சி | NNVQ | 390 | 201 | 12 | 10 | 613 |
| RPL | NVQ | 53 | 0 | 0 | 0 | 53 |
| மொத்தம் | | 1404 | 488 | 60 | 37 | 1989 |

அட்டவணை இலக்கம் 08: 2024.12.31 ஆம் திகதியில் கல்வி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை:

| பிராந்திய நிலையம் | கற்கைநெறி | திறன் அங்கீகரிக்கப்பட்ட மட்டம் NVQ level | கற்கை நெறிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | 2024.12.31 ஆம் திகதியில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| நீர்கொழும்பு | தேசிய டிப்ளோமா | 5 | 5 | 148 | 294 |
| நீர்கொழும்பு | சான்றிதழ் NVQ | 3 / 4 | 6 | 91 | |
| நீர்கொழும்பு | சான்றிதழ் Non NVQ | - | 1 | 10 | |
| நீர்கொழும்பு | நடமாடும் பயிற்சிகள் | - | 3 | 45 | |
| திருகோணமலை | தேசிய டிப்ளோமா | 5 | 1 | 10 | 10 |
| திருகோணமலை | சான்றிதழ் | 3 / 4 | 0 | 0 | |
| திருகோணமலை | நடமாடும் பயிற்சி | - | 0 | 0 | |
| காலி | உயர் தேசிய டிப்ளோமா | 6 | 1 | 34 | 194 |
| காலி | தேசிய டிப்ளோமா | 5 | 2 | 62 | |
| காலி | சான்றிதழ் NVQ | 3 / 4 | 5 | 80 | |
| காலி | சான்றிதழ் Non NVQ | - | 1 | 18 | |
| காலி | நடமாடும் பயிற்சி | - | 0 | 0 | |
| தங்கல்லை | உயர் தேசிய டிப்ளோமா | 6 | 1 | 33 | 197 |
| தங்கல்லை | தேசிய டிப்ளோமா | 5 | 4 | 103 | |
| தங்கல்லை | சான்றிதழ் NVQ | 3 / 4 | 2 | 31 | |
| தங்கல்லை | சான்றிதழ் Non NVQ | - | 0 | 0 | |
| தங்கல்லை | தொடர் விடுவிப்புச் சான்றிதழ் (CDC) பாடத்திட்டங்கள் | STCW/ISO | 2 | 30 | |
| தங்கல்லை | நடமாடும் பயிற்சி | - | 0 | 0 | |
| யாழ்ப்பாணம் | தேசிய டிப்ளோமா | 5 | 2 | 33 | 55 |
| யாழ்ப்பாணம் | சான்றிதழ் NVQ | 3 / 4 | 0 | 0 | |
| யாழ்ப்பாணம் | நடமாடும் பயிற்சி | - | 1 | 22 | |
| மட்டக்குளி | தேசிய டிப்ளோமா | 5 | 4 | 76 | 437 |
| மட்டக்குளி | சான்றிதழ் | - | 0 | 0 | |
| மட்டக்குளி | தொடர் விடுவிப்புச் சான்றிதழ் (CDC) பாடத்திட்டங்கள் | STCW/ISO | 2 | 50 | |
| மட்டக்குளி | நடமாடும் பயிற்சி | - | 2 | 311 | |
| பானந்துரை | தேசிய டிப்ளோமா | 5 | 4 | 97 | 142 |
| பானந்துரை | சான்றிதழ் NVQ | 3 & 4 | 1 | 11 | |
| பானந்துரை | சான்றிதழ் Non NVQ | - | 1 | 23 | |
| பானந்துரை | நடமாடும் பயிற்சி | - | 1 | 11 | |
| மட்டக்களப்பு | தேசிய டிப்ளோமா | 5 | 1 | 20 | 79 |
| மட்டக்களப்பு | சான்றிதழ் | 3 & 4 | 1 | 13 | |
| மட்டக்களப்பு | நடமாடும் பயிற்சி | - | 2 | 46 | |
| 2024.12.31 ஆம் திகதியில் கல்வி கற்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | | | **56** | **1408** | **1408** |

அட்டவணை இலக்கம் 09: 2024 ஆம் ஆண்டில் வழங்கிய சான்றிதழ்களின் எண்ணிக்க

| திறன் அங்கீகரிப்புகள் | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை ( 2024 திசெம்பர் 31 வரை ) |
|---|---|
| **தேசிய தொழிற் தகைமைகள்** | **334** |
| **தேசிய தொழிற் தகைமைகள் அற்ற (Non-NVQ)** | **464** |
| **மீன்பிடிப் படகு வழிகாட்டுநர் திட்டம்** | **107** |
| முன்னனுபவ மதிப்பீட்டு முறைமையின் கீழ் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ்கள் (RPL) | **52** |
| **மொத்தம்** | **957** |



### 05.1.2.2. முன்னேற்றம்

❖ இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்களில், தொழிற்கல்வி தொழில்நுட்பப் பிரிவில், டிப்ளோமா படிப்புகளை முடித்து, தேசிய தொழில் தகைமை மட்டம் 05 ஐப் பூர்த்தி செய்த 206 மாணவர்களுக்கு, 2024.11.20 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மூன்றாவது டிப்ளோமா பட்டமளிப்பு விழாவில் டிப்ளோமா பட்டங்கள் வழங்கப்பட்டன



❖ பிராந்திய நிலையங்களால் நடத்தப்பட்ட பாடநெறிகளுக்கான தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்கள் (NVQ) 387 ம், தேசிய தொழில் தகைமையற்ற சான்றிதழ்கள் (Non-NVQ) 563 ம் வழங்கப்பட்டுள்ளன

❖ .நிரல் வரிசை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் "நிபுணதா சிசு சவிய" புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்துடன் ஒருங்கிணைந்து தொழில் நுட்பப் பிரிவின் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

❖ கல்விச் சபையின் மற்றும் ஆளுகைச் சபையின் அனுமதியுடன், தொழிற்கல்வி தொழில்நுட்பப் பிரிவின் மாணவர்களுக்காக, ஒரு தொழில் வழிகாட்டல் பிரிவு (Vocational Career Guidance Unit) நிறுவப்பட்டது. எட்டு (08) பிராந்திய நிலையங்கள் மற்றும் பிரதான அலுவலகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்பது (09) அலுவலர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டது. தொழில்சார் வழிகாட்டலுக்காக, நிரல் வரிசை அமைச்சினால் "Career One" என்ற புதிய இணைய மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள 70 தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் உட்பட, தொழில் கல்வி கற்ற மாணவர்களை வேலைவாய்ப்பில் அமர்த்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய திட்டத்திற்கு, தொழில் வழிகாட்டல் பிரிவு தனது பங்களிப்பை வழங்குகின்றது.



.

❖ பிராந்திய நிலையங்களினால் (காலி, யாழ்ப்பாணம்), முன்னறிவு மதிப்பீட்டு முறையின் (RPL) கீழ், ஸ்கூபா மூழ்காளர் மற்றும் கடற்றொழில் படகு செலுத்துனர் (தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்கள் - NVQ Level 04) ஆகியோருக்கான தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்கள் (NVQ) 53 ஐ இவ்வருடத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன





❖ 2024 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்காக புதிய காணித் துண்டொன்றைக் கையகப்படுத்துதல்.






❖ யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால், கடல் அட்டை வளர்ப்பு தொடர்பான அடிப்படை தொழில்நுட்பப் பாடநெறி மற்றும் கடல் தாவர வளர்ப்பு தொடர்பான அடிப்படை தொழில்நுட்பப் பாடநெறி என்பன ஆரம்பிக்கப்பட்டன.





❖ யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால், "படகு உற்பத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பான அடிப்படை தொழில்நுட்பம்" என்ற குறுகிய காலப் பாடநெறியை அறிமுகப்படுத்துவதற்கான பாடத்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

❖ தங்கல்லை மற்றும் காலி பிராந்திய நிலையங்களில், கடற்படை போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்களுக்கு அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.





## 05.2 பல்கலைக்கழகத்தின் சமூக பொறுப்புகள் - சமூக பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

2024 ஆம் ஆண்டில் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தினால் சமூகப் பொறுப்புணர்வுப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, உயர் கல்விப் பிரிவு மற்றும் தொழிற்கல்வி தொழில்நுட்பப் பிரிவின் பிராந்திய நிலையங்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலன்புரித் திட்டங்கள் பின்வருமாறு ஆகும்.

❖ **<u>உயர் கல்விப் பிரிவு</u>**

**01.** பள்ளிவாசலுடன் இணைந்து, அப்பகுதியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. (21.01.2024)



**02.** கிராமிய சகவாழ்வை மேம்படுத்தும் நோக்குடன், அனைத்து மாணவர்களுடனும் இணைந்து அட்டவிசி புத்த பூஜை நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. (23.05.2024)



**03.** உலக சமுத்திர தினத்திற்கு இணையாக, கரையோரத்தை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். (08.06.2024)



**04.** ருஹிரு பாரமி என்ற பெயரில் "ரத்ததான" நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை நடாத்துதல். (03.12.2024)



❖ <u>தொழிற்கல்வி தொழில்நுட்பப் பிரிவு</u>

01. தங்கல்லை பிராந்திய நிலையத்தினால், தங்கல்லை துறைமுகத்திலிருந்து அம்பாந்தோட்டை திசை நோக்கி ஒரு கிலோமீற்றர் கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது, பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கும் நோக்கில், கடற்றொழில் சமூகம், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் பங்களிப்புடன், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் தொடர்ச்சியாக நடாத்தப்படவுள்ளது.





02.யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால், தொழில் பயிற்சி பாடநெறிகள் குறித்து இளைஞர் சமூகத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.



03. தங்கல்லை பிராந்திய நிலையத்தினால், வெளியே பொருத்தப்படும் என்ஜின்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான நடமாடும் வேலைத்திட்டமொன்று 22.10.2024 அன்று தங்கல்லை, உனாகுருவ பிரதேசத்தில் கடற்றொழில் சமூகத்திற்காக இலவசமாக நடாத்தப்பட்டது. கடல் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படும் கடற்றொழில் படகுகளின் என்ஜின்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவைகளை வழங்குதல் ஆகியன பயிலுநர்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன..




*04.* படகுச் சமநிலையைப் பேணி, சரியான முறையில் படகை இயக்குவது குறித்து மீனவர்களுக்கு நடைமுறை விழிப்புணர்வு அளிக்கும் ஒரு நாள் வேலைத்திட்டமொன்று 16.12.2024 அன்று தங்கல்லை கடற்கரையில் நடைபெற்றது..




## 05.3 பல்கலைக்கழகத்தின் நிருவாகம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம், இலங்கையின் மீன்பிடி, கடல்சார் மற்றும் சமுத்திரவியல் துறைகளில் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மீன்பிடி, கடல், அறிவியல், சமுத்திரத் தொழில்நுட்பம் மற்றும் அதுபோன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்தி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி மற்றும் நடைமுறை அறிவைப் பெற்ற மனிதவளத்தை உருவாக்குவதன் மூலம் தேசியப் பொறுப்பை நிறைவேற்றுகிறது.
துணைவேந்தர் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியின் தலைவர் மற்றும் நிர்வாகியாக உள்ளார். அவர் முழுமையான பொது நிர்வாகத்திற்கான பதிவாளரின் பொறுப்பைக் கொண்டுள்ளார். உயர் கல்விப் பிரிவு இரண்டு பீடாதிபதிகளாலும், தொழிற்கல்வி தொழில்நுட்பப் பிரிவு பயிற்சிப் பணிப்பாளராலும் நிர்வகிக்கப்படுகிறது. அத்துடன், ஆளுகைச் சபை, கல்விச் சபை, பீடச் சபைகள், நிதிக் குழு, சேர்க்கை, அங்கீகாரம், தர உறுதிப்படுத்தல் சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு போன்றவற்றால் நிதி மற்றும் அனைத்து சொத்துக்களும் திறம்படவும் வினைத்திறனுடனும் நிர்வகிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக நிர்வாகமானது, அனைத்து பங்குதாரர்களான சேவை பெறுவோர், கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி, விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தினரின் தேவைகளை சமநிலைப்படுத்தும் வகையில் முடிவுகளை எடுத்து, திறமையான மற்றும் வினைத்திறனான நிர்வாகத்தை உறுதி செய்கிறது.



| ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்பாடு | கொள்கைகள் மற்றும் நடைமுறை திட்டங்கள் | சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு |
|---|---|---|
| 1. உள்ளகக் கணக்காய்வு<br>2. அமைச்சுசார் கணக்காய்வு<br>3. தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு | 1. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் செயல்முறைகள்<br>2. பிரசைகளின் சாசனம்<br>3. ஆபத்து முகாமைத்துவ முறைகள் | 1. 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டம்<br>2. தாபன விதிகள்<br>3. நிதி ஒழுங்குவிதிகள்<br>4. பெறுகை வழிகாட்டல் கோவை<br>5. அரச சுற்றுநிருபங்களை நடைமுறைப்படுத்தல்<br>6. ஆளுகைச் சபை முடிவுகள் |

உள்ளக நிருவாக கட்டமைவு

**01.**பொறுப்பு கூறல்

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் தனது நிதி நிர்வாகத்தை, 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டம், பகுதி X, இல. 48, நிதி ஒழுங்குவிதிகள், அரச சுற்றறிக்கைகள், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் வழிகாட்டுதல்கள், வரவுசெலவு திட்டத் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் தொடர்புடைய அனைத்து சுற்றறிக்கைகள் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம், உரிய அமைச்சுக்கள் மற்றும் கணக்காய்வு பிரிவுகளால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின்படி மேற்கொள்கிறது. இது, இறுதிக் கணக்குகளில், அரச நிதிச் செலவினங்கள் பொறுப்புக்கூறலுடன் நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்கிறது.

**02. சட்ட ஆட்சியினை பற்பற்றுதல்**



### 03. ஆளுகைச் சபை கூட்டங்கள்

சமுத்திரப் பல்கலைக்கழகம் 2024 ஆம் ஆண்டில் அதன் நிர்வாக, கல்வி மற்றும் கல்விசாரா நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நடாத்திய கூட்டங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நிர்வாக சபை | 08 |
| கல்வி சபை | 09 |
| சேர்க்கை, அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்படுத்தல் சபை | 02 |
| நிதி குழு | 03 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 04 |
| பீடாதிபதி குழு | 10 |
| ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு குழு | 09 |
| பொறியியல் மற்றும் மேலாண்மை பீடக் கூட்டம் | 12 |
| மீன்வளம் மற்றும் கடல்சார் அறிவியல் பீடக் கூட்டம் | 11 |

## 5.4 நிருவாகப் பிரிவின் முன்னேற்றம்

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவு, 2024 ஆம் ஆண்டில் பின்வரும் முன்னேற்றங்களை அடைந்துள்ளது.

### நிர்வாகப் பிரிவின் உப அலகு முன்னேற்றம்

### 5.4.1 மனிதவள மேம்பாட்டுப் பிரிவு

மனிதவள மேம்பாட்டுப் பிரிவு, பல்கலைக்கழகத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைவதற்காக மனிதவளங்களை நியமனம் செய்து, மேம்படுத்துகிறது. இதற்கிணங்க, பதவியணி ஊக்குவித்தல் மற்றும் நலனை முதன்மையாகொண்ட ஒழுக்கமான பதவியணியைப் பேணுவதற்கு தேவையான பணிக் கட்டமைப்புகள் நிர்வகிக்கப்படுகின்றன.

அதன்படி, 01.01.2024 - 31.12.2024 வரையிலான பணியாளர்களை பின்வருமாறு குறிப்பிடலாம்:

| ஊழியர்கள் | | 2024.01.01 – 2024.12.31 | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| **சிரேஷ்ட நிலை மட்டம்** | | | | |
| | நிரந்தர (தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உள்ளிட்ட அலுவலர்கள் அடங்கலாக) | 15 | 14 | 29 |
| | ஒப்பந்த அடிப்படையில் | 02 | 00 | 02 |
| | வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் | 9 | 03 | 12 |
| | அமைய | 00 | 00 | 00 |
| | மொத்தம் (1) | **26** | **17** | **43** |
| **மூன்றாம் நிலை மட்டம்** | | | | |
| | நிரந்தர (தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உள்ளிட்ட அலுவலர்கள் அடங்கலாக) | 03 | 01 | 04 |
| | ஒப்பந்த அடிப்படையில் | 00 | 00 | 00 |
| | வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் | 02 | 00 | 02 |
| | அமைய | 00 | 00 | 00 |
| | மொத்தம் (2) | **05** | **01** | **06** |
| **இடை நிலை மட்டம்** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிரந்தர (தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உள்ளிட்ட அலுவலர்கள் அடங்கலாக) | 20 | 29 | 49 |
| | ஒப்பந்த அடிப்படையில் | 14 | 20 | 34 |
| | வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் | 18 | 03 | 21 |
| | அமைய | 00 | 00 | 00 |
| | மொத்தம் (3) | **52** | **52** | **104** |
| **ஆரம்ப மட்டம்** | | | | |
| | நிரந்தர (தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உள்ளிட்ட அலுவலர்கள் அடங்கலாக) | 53 | 06 | 59 |
| | வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் | 01 | 00 | 01 |
| | **மொத்தம்** (4) | **54** | **06** | **60** |
| **Total (1) + (2) + (3) + (4)** | | **137** | **76** | **213** |

**பதவியணி மொத்தம்** (1) + (2) + (3) + (4)

| பதவியணி | சம்பள குறியீடு | அங்கீகரிக் கப்பட்ட பதவிய ணி | தற்போதுள்ள ஊழியர்கள் | | | உண் மை யான பதவி யணி | நிரந்தர பதவியணி வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தர | தறகாலிக | ஒப்பந்தம் | | |
| கல்விசார் | U AC | 34 | 24 | 01 | 01 | 26 | 09 |
| ** தனிப்பட்ட வகையில் | | 05 | 05 | 00 | 00 | 05 | 00 |
| நூலகவியலாளர் | U AC | 03 | 00 | 00 | 00 | 00 | 03 |
| நிர்வாகம் மற்றும் நிதி | U EX 3 /U EX 2 | 10 | 4 | 00 | 1 | 5 | 6 |
| ** தனிப்பட்ட வகையில் | U EX 3/ U EX 2 | 10 | 07 | 00 | 00 | 07 | 00 |
| ஏனைய நிறைவேற்று | U EX 1 | 07 | 04 | 00 | 00 | 04 | 03 |
| ** தனிப்பட்ட வகையில் | | 02 | 02 | 00 | 00 | 02 | 00 |
| சுகாதாரம் | U AS 1 | 01 | 00 | 00 | 00 | 00 | 01 |
| கல்விசார் உதவியாளர் | AR 1 U MN 3/ U MN 2-2 | 77 | 03 | 00 | 28 | 27 | 74 |
| ** தனிப்பட்ட வகையில் | | | 15 | 00 | 00 | 15 | 00 |
| Fixed Allowance | | 12 | | | 04 | 04 | 08 |
| தொழிநுட்பஅலு வலர் - முகாமைத்துவ உதவியாளர் | U MT | 18 | 01 | 00 | 03 | 04 | 17 |
| முகாமைத்துவ உதவியாளர் | U MN | 59 | 48 | 00 | 00 | 48 | 11 |
| ** தனிப்பட்ட வகையில் | | | 06 | 00 | 01 | 07 | 00 |
| ஆரம்ப | U PL | 98 | 59 | 01 | 00 | 60 | 38 |

** ** மேன்முறையீட்டு சபையின் தீர்மானத்திற்கு அமைவாக உள்ளீர்க்கும்போது, கல்லூரி விரிவுரையாளர் பதவிகள் U AC 3/ U EX 3/ U EX 1/ U MN 1 சம்பள குறியீட்டின் கீழ் வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கல்விசார் பதவியணி விபரங்கள்

| பீடம் | துறை/ பிராந்திய மையம் | துறை/ பிராந்திய மையம் | பேராசிரியர் | மூத்த விரிவுரையாளர் | விரிவுரையாளர் (பல்கலைக்கழகம்/ மண்டல மையம்) நிரந்தரம்/ தற்காலிகம் | | விரிவுரையாளர் (பல்கலைக்கழகம்/ மண்டல மையம்) | ஒப்பந்தக் கல்விப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தரம் | நிகழ்தகவு | | |
| பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம் | | | 02 | 09 | 06 | 03 | 04 | 00 |
| மீன்பிடி மற்றும் கடல்சார் அறிவியல் பீடம் | | | 11 | 03 | 03 | 00 | 01 | 01 |

(இ) கல்விசார பதவியணி விபரங்கள்

| பீடம்/ பிரதேச நிலையம் | பதவியணி | | | | |
|---|---|---|---|---|---|
| | சிரேஷ்ட | மூன்றாம் நிலை | இடைநிலை | ஆரம்ப | ஒப்பந்தம் |
| தலைமை அலுவலகம் | 06 | 04 | 23 | 23 | 04 |
| கடற்றொழில் மற்றும் கடல்சார் அறிவியல் பீடம் | 13 | 00 | 11 | 04 | 03 |
| பொறியியல் மற்றும் முகாமைத்துவ பீடம் | 11 | 01 | 03 | 03 | 01 |
| கப்பல் பராமரிப்புப் பிரிவு | 00 | 01 | 04 | 00 | 01 |
| மட்டக்குளி பிராந்திய நிலையம் | 02 | 00 | 00 | 02 | 05 |
| நீர்கொழும்பு பிராந்திய நிலையம் | 01 | 00 | 04 | 05 | 03 |
| பானந்துறை பிராந்திய நிலையம் | 01 | 00 | 03 | 04 | 07 |
| காலி பிராந்திய நிலையம் | 02 | 00 | 04 | 04 | 01 |
| தங்காலை பிராந்திய நிலையம் | 03 | 00 | 10 | 09 | 03 |
| திருகோணமலை பிராந்திய நிலையம் | 01 | 00 | 02 | 01 | 02 |
| மட்டக்களப்பு பிராந்திய நிலையம் | 01 | 00 | 05 | 06 | 02 |
| யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் | 00 | 00 | 04 | 02 | 04 |

**05.4.2** நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கொள்கை மற்றும் மூலோபாயத்திற்கு இணங்குதல்.

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்திற்கு இணங்க, பல்கலைக்கழகத்தின் உயர் கல்வி, பயிற்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளது..

திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சினால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சித் துறையின் நோக்கத்துடன் தொடர்புடைய பணிகள் மற்றும் இலக்குகள், அந்த இலக்குகளை அடைய வேண்டிய குறிகாட்டிகள், மைல்கற்கள் மற்றும் இலக்குகளை அடைவதை அளவிடுவதற்காக இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய குறிகாட்டிகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பல்கலைக்கழகம் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகள் தொடர்பில், நடைமுறைப்படுத்திய திட்டங்கள்/வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் ஒழுங்குப்படுத்தப்படுகிறது.

## 05.5 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை அடைவதை உறுதி செய்வதற்காக, பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் முறைமைகளில் காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளில் உள்ள பிழைகளையும் மோசடிகளையும் தடுத்தல் மட்டுமின்றி கண்டறிவதற்கு முறையான உள்ளக ஆய்வுகளை மேற்கொள்ளுதல். அத்துடன் முன்னேற்றம்/கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவளித்தும், ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டும் பல்கலைக்கழகத்தின் தலைவருக்கு அறிக்கையிடும் முகவர் பணியை மேற்கொள்கின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள்:.

- உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் செயற்பாடுகள் வெற்றிபெற்றனவா என ஆராய்தல்..
- சரியான நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதை ஆராய்தல்.
- பதவியணிக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை ஆராய்தல்.
- சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆராய்தல்
- சட்டதிட்டங்களும் நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றனவா என்பதை ஆராய்தல்.

- வீண்விரயம், ஊழல், தேவையற்ற செலவினம்களைத் தடுப்பதற்கான கட்டுப்பாட்டு முறைகள் உள்ளனவா என ஆராய்தல்.
- சொத்துக்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய்தல்.
- விசேட விசாரணைகளை மேற்கொள்ளுதல்.
- முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் செயற்பாடுகளைப் பரிசீலனை செய்தல்.
- இலக்குகளின் காரணிகளை ஆராய்தல்.

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, தீவிலுள்ள ஏனைய கல்லூரிகள் அனைத்தையும் உள்ளடக்கிய வகையில் கணக்காய்வு மற்றும் விசாரணைப் பணிகளை மேற்கொள்வதுடன், நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாகத்தை சரியான திசையில் வழிநடாத்துகிறது..

2024 ஆம் ஆண்டின் முன்னேற்றம்.

- உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 10 உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் முன்னேற்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்..
- 04 விசேட விசாரணைகளை மேற்கொண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்..
- 03 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்களை நடாத்தி, நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மீளாய்வு செய்தல்.

உள்ளக கணக்காய்வு வினவல்கள்.

உள்ளக கணக்காய்வு வினவல்கள்.

**உள் தணிக்கை அறிக்கைகள்**



## 06. ஆபத்து முகாமைத்துவம்

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நீண்டகால வெற்றிக்காக, பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயல்முறைகள் மற்றும் பங்குதாரர்களின் பொறுப்பு அத்துடன் பொறுப்புக்கூறல் என்பன ஆபத்து முகாமைத்துவத்தின் ஒரு முக்கியமான ஆதாரமாகக் கருதப்படுகின்றன. இதற்கமைய, பல்கலைக்கழகத்தின் ஆபத்துக்களை முன்கூட்டியே அடையாளம் காணுதல், புரிந்துகொள்ளுதல், முகாமைத்துவம் செய்தல், ஆபத்துகளை குறைத்தல், ஆபத்துகளை மாற்றுதல் அல்லது தவிர்த்தல் போன்ற செயலில் அணுகுமுறையொன்று பல்கலைக்கழகத்தின் ஆபத்து முகாமைத்துவ கட்டமைப்பு மூலம் திறம்பட மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இப்பணியில் இடரை முழுமையாக அகற்ற முடியாவிட்டாலும், மூலோபாய அணுகுமுறைகள் மூலம் மூலோபாய நோக்கங்களைப் பாதுகாத்தல், புத்திசாலித்தனமாக ஆபத்துகளை ஏற்றுக்கொள்வது மற்றும் ஆபத்துகளைப் பற்றிய விழிப்புணர்வு உத்திகளைப் பல்கலைக்கழகம் நிறைவேற்றுகிறது..

பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான அபிவிருத்திக்காக, அனைத்து அமைப்புகளையும் உள்ளடக்கி ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஆபத்துகள் நிர்வகிப்பதை உறுதி செய்வதற்கு பின்வரும் மூலோபாயங்கள் பின்பற்றப்படுகின்றன.

| இடரின் தன்மை | இடரின் தன்மையைத் தெளிவுபடுத்துதல் | ஆபத்து நிவாரண நடவடிக்கைகள் | ஆபத்து உரிமையாளர் |
|---|---|---|---|
| 1. பேரழிவு நிகழ்வுகள் | அவசர அனர்த்தம்/பேரழிவு/நாசகார சூழ்நிலையில், பல்கலைக்கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுதல் மற்றும் பதவியணியின் உடல் காயங்கள், உயிர் இழப்பு மற்றும் சொத்துகளுக்கு இழப்பு ஏற்படுதல். | பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கங்களை அடையாளம் காணுதல், முக்கியமான பணிகள் மற்றும் பிரிவுகளுக்கு இடையிலான தங்கியிருத்தலை அடையாளம் காணுதல்<br><br>அடையாளம் காணப்பட்ட முக்கியமான பணிகளுக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆபத்துகளை அடையாளம் கண்டு, அந்த அபாயங்களுக்கான எதிர்கால திட்டங்களைத் தயாரித்தல். | அனைத்துப் பிரிவுத் தலைவர்களு ம் |
| 2. வர்த்தக ஆபத்து | பல்கலைக்கழகத்தின் நோக்கங்களில் செல்வாக்குச் செலுத்தும் வளர்ச்சி காரணிகள், போட்டித்தன்மை, சேவை பெறுவோருக்கு வழங்கப்படும் சேவையைக் குறைத்தல் அல்லது நிறுத்துதல் போன்றவற்றிற்குக் ஏதுவாக அமைகின்ற காரணிகளை அடையாளம் காணுதல். | கவனம் செலுத்த வேண்டிய பிரதான போட்டித் துறைகளை அடையாளம் காணுதல், சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்கள் செயற்பட்டு பல்கலைக்கழகத்தின் சேவை வழங்கல் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் | கல்விப் பிரிவுத் தலைவர்கள் (பீடாதிபதிகள் மற்றும் பயிற்சிப் பணிப்பாளர்)( |

| | | | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவம் செய்தல்.. | |
| | நிச்சயமற்ற பொருளாதார சூழலில், நோக்கமாக கொள்கின்ற பிரதான நடவடிக்கைகள்/நிகழ்ச்சித்திட்டங்கள் சிலவற்றின் மீது, அதிக சுமையைச் சுமத்தித் தங்கியிருப்பதன் காரணமாக, இலக்கு வைக்கப்பட்ட பயிற்சியாளர்கள்/இலக்கு வைக்கப்பட்ட வருமானத்தை அடைவதில் ஒட்டுமொத்த வெளியீட்டில் ஏற்படும் பாதகமான விளைவுகள். | பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கம் பயிற்சி பெற்ற மனிதவளத்தை வழங்குவதாகும். எனவே, கல்வி மற்றும் சந்தைப் பொருளாதாரத்தில் உருவாகி வரும் பல்வேறு போக்குகளை ஆராய்ந்து, அதற்கேற்ப பாடத்திட்டங்களை மேம்படுத்துதல். | |
| 3. செயற்பாட்டு ஆபத்து | பல்கலைக்கழகத்தின் செயல்திறன், அது வழங்கும் சேவையுடன் தொடர்புடைய பல்கலைக்கழக அமைப்புகள், சேவை வழங்கப்படும் விதம், பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான அனைத்துச் செயற்பாட்டு அபாயங்களுக்கு உள்ளாதல், சேவை வழங்கலின் தரக்குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்வது அதிகரித்தல் அல்லது சேவை பெறுநர்களின் திருப்தி குறைவடைதல் ஆகியவற்றை அடையாளம் காணுதல்.. | மாணவர் பின்னூட்டங்களைப் பெறுதல் மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறையைத் தொடர்ச்சியாகத் தர மீளாய்வு செய்தல், பதவியணியின் செயல்திறன் மதிப்பீடுகளை செயல்திறன் வருவாயுடன் தொடர்புபடுத்துதல் மற்றும் ஊழியர்களின் திறனை மேம்படுத்துதல்.<br><br>ஆபத்து முகாமைத்துவம், அனர்த்தங்களிலிருந்து மீளெழுதல் மற்றும் வழக்கமான பயிற்சிகளுடன் அவசரகால பதிலளிப்பிற்கான தொடர்ச்சியான திட்டமிடலைப் பல்கலைக்கழகத்திற்குள் பேணுதல். | பராமரிப்பு மற்றும் நிர்வாகம்/ மனித வளங்கள்<br><br>கல்விப் பிரிவுத் தலைவர்கள் (பீடாதிபதிகள் மற்றும் பயிற்சிப் பணிப்பாளர்) |
| | எதிர்பாராத நிகழ்வுகளின் மூலம் பதவியணியின் ஆரோக்கியம், பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் மற்றும் சேதங்கள் ஏற்படலாம். மேலும் நிலையான சொத்துக்கள் அல்லது உபகரணங்கள் திருடப்படுதல், சேதப்படுத்தப்படுதல் அல்லது | தொற்றுநோய் ஒழிப்பு/கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பேணுதல்<br><br>சொத்துக்களின் பௌதீக பாதுகாப்பு கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் மேம்படுத்துதல், CCTV | பராமரிப்பு மற்றும் நிர்வாகம்/ மனித வளங்கள்<br><br>கல்விப் பிரிவுத் தலைவர்கள் (பீடாதிபதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | மோசடியாக மாற்றியமைக்கப்படுதல்.. | கெமராக்களை பொருத்தி வெற்றிகரமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துதல். | மற்றும் பயிற்சிப் பணிப்பாளர்) |
| **4.** நிதிசார் அபாயம் | பொருளாதார/வாழ்க்கைச் செலவினம் நெருக்கடிகள் காரணமாக ஏற்படும் உறுதியற்ற தன்மைகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் அதிகரிப்பதால், நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் நிலுவையிலுள்ள கடனாளர்களின் நிலுவைகளில் தாக்கம் ஏற்படுவதால், பணப்புழக்கம் மற்றும் நீர்மைத் துறைகளில் ஏற்படும் நிதிசார் அபாயங்கள் மற்றும் முறையான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படும் போலியான கொடுப்பனவுகள் மூலம் ஏற்படும் நிதிசார் அபாயங்களை அடையாளம் காணுதல்.. | கொடுப்பனவுகள் குறித்து உரிய தரப்பினருக்கு முறையாக அறிவித்தல்.<br><br>பெறப்பட வேண்டிய நிலுவைகளை மீளப்பெற பின்தொடர் நடைமுறைகளை மேற்கொள்ளுதல்.<br><br>கொடுப்பனவு வவுச்சர்களை, நடைமுறைகளுக்கு அமைய சான்றளிப்பதற்காக சமர்ப்பித்தல், நிதிசார் தொடர்பாடல் மற்றும் வெளிப்படுத்தல்களில் வெளிப்படைத்தன்மை யை உறுதி செய்தல். | நிதிப் பணிப்பாளர் மற்றும் நிர்வாக அலுவலர்கள் |
| **5.** ஒழுங்குபடுத்தல் ஆபத்து | அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, ஒழுங்குபடுத்தல் நிபந்தனைகள், அரச சுற்றுநிருபங்கள், அமைச்சு அறிவுறுத்தல்கள், நிர்வாக சபைத் தீர்மானங்கள், பல்கலைக்கழகத் தேவைகள், தொழிலாளர் சட்டங்கள், பணியிட பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாக இருந்தாலும், அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறினால், அபராதங்கள் அல்லது வழக்குகள் உட்பட பிற தடைகளுக்கு உட்படுத்தப்படலாம். | பல்கலைக்கழக உள்ளக கட்டுப்பாடு/தொடர்பாடல் முறைகளை வலுப்படுத்துதல்.<br><br>பல்கலைக்கழகப் பிரிவுகளின் இணக்கப் பரிசோதனைப் பட்டியலை காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.. | நிர்வாக மற்றும் மனித வளம் |

# 07. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு - செயலாற்றுகை 2024

**2024 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு – செயலாற்றுகை**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அமைப்பு

| | பெயர் | பதவி | குழுவின் பதவி |
|---|---|---|---|
| 01. | திரு.எச்.பி. சோமதிலக்க | பணிப்பாளர் -தேசிய திட்டமிடல் திணைக்களம் | தலைவர் |
| 02. | கலாநிதி கே.ஏ. லலிததீர | பணிப்பாளர் நாயகம், உயர் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஆணைக்குழு. | உறுப்பினர் |
| 03. | பொறியியலாளர் சனத் பனவென்னகே. (2024 (II) கூட்டம் வரை) | பணிப்பாளர் நாயகம், பிரதம பொறியியலாளர் - ஆர்தர் சி. கிளார்க் நிலையம் | உறுப்பினர் |
| 04. | திருமதி டப்ளியு.ஆர்.பி.யூ. நுவந்தி (2024 (III) கூட்டம்) | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) - உயர் கல்வி, கல்வி அமைச்சு | உறுப்பினர் |

அவதானிப்பாளராக:-

| | | | |
|---|---|---|---|
| 05. | திருமதி டப்ளியு.ஜீ.ஆர்.என். வீரக்கொடி (2024 (I) கூட்டம் வரை)) | கணக்காய்வு அதிகாரி - தேசிய கணக்காய்வு அலுவலகம். | அவதானிப்பாளர் |
| 06. | கே.பி.எல்.எம். கருணாச்சந்திர (2024 (II)/(III) கூட்டம் வரை) | கணக்காய்வு அலுவலர் | அவதானிப்பாளர் |
| 07. | எம்.கே.என்.கே.பி. குமாரகே. (2024 (II)/(III) கூட்டம் வரை) | கணக்காய்வு அலுவலர் | அவதானிப்பாளர் |
| 08. | திருமதி எச்.டி. அநுருத்திகா | பிரதம உள்ளக கணக்காய்வாளர் – நிரல் வரிசை அமைச்சு. | அவதானிப்பாளர் |

ஆண்டில் நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை – 03

| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இலக்கம் | I மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடைபெற்ற திகதி |
|---|---|
| I ஆவது கூட்டம் | 2024.03.28 |
| I1 ஆவது கூட்டம் | 2024.07.05 |
| I11 ஆவது கூட்டம் | 2024.09.11 |
| IV ஆவது கூட்டம் | ஆளுகைச் சபையின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2024 (IV) ஆம் கூட்டத்தை நடாத்துவதற்கு முடியவில்லை. |

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானங்கள்

## I ஆம் கூட்டம்.

| தொடர் இல | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானங்கள் | பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 17 - 1 | கிடைக்கப்பெற வேண்டிய ரூபாபா.3.7 மில்லியன் நிலுவை உள்ளிட்ட பதிவழிப்புகளுக்கு அனுமதிப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆளுகைச் சபை பத்திரம் 2024 ஏப்ரல் மாதம் ஆளுகைச் சபை கூட்டத்தில் சமர்ப்பிப்பதாக பணிப்பாளரால் (நிதி) குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. | 84/4/FN/1 ஆம் இலக்க பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், 84 ஆவது ஆளுகைச் சபையிடம் ஒரு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், அறிவுறுத்தல்கள் பெறப்பட்டு 85ஆவது ஆளுகைச் சபைசபைக்கு விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. |
| 17-2 | விருந்தோம்பல் இல்லங்களாக (party houses) பெயரிடப்பட்டுள்ள அலகுகளுக்கான பொருளாதார வாடகையை கிராம அலுவலர்/மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்டு, அந்த கட்டண விபரங்களை கணக்குப் பிரிவிடம் சமர்ப்பிக்குமாறு உதவிப் பதிவாளரிடம் (பராமரிப்பு) அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வாடகை அறவிடுதலுக்கு ஏற்புடையதான அறிக்கை 86 ஆவது ஆளுகைச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும், வாடகை அறவிடப்படும். |
| | சேவையிலிருந்து விலகும்/ஓய்வுபெறும் அலுவலர்களின் நிலுவைத் தொகை அறவிடல், ஊழியர் சேமலாப நிதியத்திடம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் அறவிடுதல். | இசைவிணக்க அறிக்கை பெற்றுக்கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| 18-2 | படகுகள் தொடர்பான பரிந்துரைகளைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஆளுகைச் சபையிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, ஒரு படகை மாத்திரம் பழுதுபார்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஏனைய படகுகளை அப்புறப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கவும். | படகுகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 2022 (01) | அறவிட முடியாமல் உள்ள இறந்த ஊழியர் ஒருவரின் சுனாமி கடன் நிலுவையான ரூபா.55,160.00 ஐ பதிவழிப்பதற்காக, 2024 ஏப்ரல் மாதம் ஆளுகைச் சபைக்கு சமர்ப்பிக்கப்படுமெனவும், மட்டக்களப்பு கல்லூரியில் பணிபுரிந்த திரு. ரி.தச்சனாமூர்த்தி ஒப்புக்கொண்டபடி ரூபா.24,003.00 ஐ தவணை முறையில் செலுத்துமாறு நினைவூட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதெனவும், நிச்சயமற்ற கணக்கின் மிகுதியான ரூபா.85,433.00 இன் பெறுமதி குறித்து அடுத்த குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமெனவும் பணிப்பாளர் (நிதி) குழுவுக்கு அறிவித்தார். | இறந்த ஊழியரின் கடன் நிலுவையான ரூபா. 55,160.00 தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா. 24,003.00 இல், ரூபா. 10,000.00 அறவிடப்பட்டுள்ளது.. |

| | | |
|---|---|---|
| 2022 (03) (ii) | மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக நடாத்தப்படும் பரீட்சைகள் தொடர்பில், பரீட்சைத் திணைக்களத்திடம் முன்கூட்டியே விசாரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளதுடன், 2023ஆம் ஆண்டில் விசாரணைகளை மேற்கொள்ளும்போது 05 மாதங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>__பிரதம உள்ளக கணக்காய்வாளரின் அவதானிப்புகள்.__<br>இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்கான பரீட்சைகளை நடாத்துவது தொடர்பான கொடுப்பனவு முறைமையை வகுத்து, சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் | பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சைகளை நடாத்த முடியாது என அறிவிக்கப்பட்டமையால், மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது.<br><br>கொடுப்பனவு முறைமை வகுக்கப்பட்டு திறைசேரியின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 2022 (02) (i) | தாமதமாக வருகை தருபவர்களுக்கு, அவர்களின் பதவி எதுவாக இருந்தாலும், லீவு தொடர்பிலான சீராக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டுமெனவும், பணிகளை சரியான நேரத்தில் மேற்கொள்வது மனிதவளப் பிரிவின் பொறுப்பு என்பதால் குறித்த, தாமதங்கள் குறித்தும், சேவைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் குறித்தும் ஆளுகைச் சபையிடம் அறிவித்தல். | சேவைக்கு தாமதமாக வருகை தருவது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாதாந்த தாமதங்கள் சரிசெய்யப்பட்டு, அதற்கிணங்க லீவுகளில் இருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2023 (04) (iv) | மட்டக்குளி அலகின் முச்சக்கர வண்டியை போக்குவரத்து ஒதுக்கத்திடம் எடுக்கப்பட்டு, போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல் மற்றும் அதற்கான முன்னுரிமையை மட்டக்குளி பிரிவிடம் வழங்குதல். | இந்த முச்சக்கர வண்டி பிரதான அலுவலகத்தின் ஒதுக்கத்திடம் எடுக்கப்பட்டு போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| 2021 (03) | 2022ஆம் ஆண்டுக்கான பொருட்கள் ஆய்வுப் பணிகள் அனைத்து பிராந்திய நிலையங்களிலும் நிறைவடைந்துள்ளதாகவும், பிரதான அலுவலகத்தின் ஆய்வுப் பணிகள் நிறைவடையும் எனவும் உதவிப் பதிவாளர் (களஞ்சியம்) குழுவிடம் தெரிவித்தார். | 2022 ஆம் ஆண்டுக்கான பொருட்களின் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 2021 (03) | பிரதான அலுவலகத்தின் வாகனங்களில், ஒரு வாகனம் தவிர்ந்த ஏனையவற்றுக்கு எரிபொருள் பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளதாகவும், அதன் சுருக்க அறிக்கை குழுவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>தங்காலை பீடத்தின் - கார், திருகோணமலை – ஜீப் வண்டி<br><br>பாணந்துறை கார் வண்டி என்பவற்றுக்கு எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2021 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் உட்பட அதன் செயற்பாடுகள் குறித்து, 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) (ஒ) ஆம் பிரிவின் பிரகாரம் துணைவேந்தருக்கு சமர்ப்பிக்கப்படும் விரிவான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..** | | |
| ஆ ) | பாணந்துறை மத்தியநிலையத்தின் காரை அப்புறப்படுத்துவதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு குழுவை நியமித்து, அதன் பின்னர் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல். | சம்பந்தப்பட்ட அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.. |

## I1இரண்டாம் கூட்டம்.

| தொடர் இலக்கம் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானங்கள் | பல்கலைக்கழகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 17-1 | முற்பண நிலுவையான ரூபா. 3.7 மில்லியன் தொகையை பதிவழிப்பதற்காக அனுமதிபெரும் பொருட்டு அனுமதியை, திறைசேரியிடம் சமர்ப்பிக்குமாறு ஆளுகைச் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும், அரச நிதி சுற்றறிக்கைகள் இலக்கம் 1/2024 மற்றும் 2/2024 இற்கு அமைய, இந்தத் தொகையை பதிவழிப்பதற்காக ஆளுகைச் சபைக்கு ஆற்றல் உள்ளதால், அதற்காக நிதிக்குழு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளதால், மீண்டும் ஆளுகைச் சபையின் அனுமதியைப் பெறுவதற்காக ஆளுகைச் சபையிடம் சமர்பித்தல். | இந்தத் தொகையை பதிவழிப்பதற்காக ஆளுகைச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், அந்த அனுமதியை உறுதிப்படுத்துவதற்காக அடுத்த ஆளுகைச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அந்தக் கூட்டத்தில் மீண்டும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 17-2 | 01) இந்த வீடுகள் பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லாதிருத்தல், நீண்டகாலமாக பழுதுபார்க்கப்படாமல் இருத்தல் மேலும் அவை தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஒதுக்கீடு செய்யாதிருத்தல் போன்ற விடயங்கள் எனத் தெரிவிக்கப்பட்டன.<br>02 மேலும், இந்த பல்கலைக்கழகம் நாடு முழுவதும் பரவலாக்கி காணப்பவதால் , கடமைகளுக்காக கலந்துகொள்பவர்களுக்கும், அவசர நிலையின் போது பணிகளை மேற்கொள்பவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு கட்டிடங்கள் ஒதுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.<br>03. வீடுகள் தொடர்பாக அறிக்கை பெறுவதற்காக தற்போது ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையைப் பெற்று ஆளுகைச் சபையிடம் சமர்ப்பிப்பித்தல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.<br>04. சாரதிகள் மற்றும் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு விடுதிக் கட்டணங்களில் இருந்து விலக்கு அளிப்பது பொருத்தமானது எனவும், சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சின் சாரதிகளிடம் அறவிடப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.<br>05. ஏனைய உத்தியோகத்தர்களிடம் 2024 ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உதவிப் பதிவாளரிடம் (பராமரிப்பு) குழு ஆலோசனை வழங்கியது.<br>06) அத்துடன், பிராந்திய நிலையங்கள்/பீடங்களில் இருந்து பிரதான அலுவலகத்திற்கு கடமைக்காக வரும் உத்தியோகத்தர்கள் அவசர நிலையின் போது தங்குவதற்கு பொருத்தமான இடத்தை | சாரதிகள் மற்றும் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு விடுதிக் கட்டணங்களில் இருந்து விலக்கு அளிக்கவும், ஏனைய விடுதிவாசிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்களுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெறுமதிகளைப் பெற்று, 2024 ஓகஸ்ட் மாதம் முதல் நிலுவைத் தொகையுடன் அறவிடுமாறும் உதவிப் பதிவாளரிடம் (களஞ்சியம்) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது. | |
| 18-2 | பயிற்சிப் படகுகள் நான்கினை அப்புறப்படுத்துவதற்காக அனுமதி பெறப்பட்டுள்ளதால், அவற்றின் பெறுமதியைக் கணிப்பிடுவதற்கும், மேலதிக நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளைப் பெறுவதற்கும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பணிப்பாளர் (நிதி) தெரிவித்தார். | அப்புறப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 04 படகுகளை பிராந்திய நிலையங்களுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 2022 (01) | கிடைக்கப்பெற வேண்டிய சுனாமி கடன் நிலுவையான ரூபா. 24,003.00 ஐ செலுத்துமாறு 03 நினைவூட்டல்கள் அனுப்பப்பட்ட போதிலும், அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாததால், அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.. | ரூபா. 10,000.00 செலுத்தப்பட்டுள்ளது. மீதி ரூபா. 14,003.00 அறவிடப்பட வேண்டியுள்ளது. |
| 2022 (03) (ii) | மாணவர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சைகளை நடாத்துவதற்காக பணியாளர்களுக்கான கொடுப்பனவு முறைமை மற்றும் கட்டணங்களுக்காக ஆளுகைச் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், அதற்காக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானது என்பது கணக்காய்வு உத்தியோகத்தரின் அவதானிப்பு என்பதால், அதன்படி நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளரிடம் (நிதி) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவு முறைமை வகுக்கப்பட்டு ஆளுகைச் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சின் ஊடாக அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 2022 (02) (i) | பிராந்திய நிலையங்களில் நான்கு பிராந்திய நிலையங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாகவும், அவை அடிக்கடி பழுதடைவதால், அவற்றை பழுதுபார்த்தல், சேவை ஒப்பந்த கட்டணங்களை செலுத்துதல் போன்ற மேலதிக செலவுகளை ஏற்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.<br>எனவே, முக அடையாள தொழில்நுட்பம் மூலம் சேவைக்கு வருகை தரக்கூடிய வகையில், தற்போது TVEC, RDA போன்ற நிறுவனங்கள் கொள்வனவு செய்துள்ள உபகரணங்கள் குறித்து கவனம் செலுத்தி, செலவு மற்றும் EMIS அமைப்புடன் இணைக்கக்கூடிய பொருத்தமான உபகரணங்கள் தொடர்பான பரிந்துரைகளைப் பெற்று, அனைத்து பிராந்திய நிலையங்களிலும்/பீடங்களிலும் அந்த உபகரணங்களை பொருத்துமாறும், அதற்கு முகாமைத்துவ சபையின் அனுமதி தேவைப்படுமாயின் அதனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் குழு ஆலோசனை வழங்கியது. | உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான முகாமைத்துவ சபையின் அனுமதி பெறப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 2021 (03) | வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமை குறித்து கடுமையாக கவனம் செலுத்தியதுடன், பொருட்கள் கணக்கெடுப்பு பணிகளின் போது பயிற்சிப் பட்டறை உபகரணங்கள், வலைகள், | இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக ஆளுகைச் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| | பட்டறைகள் போன்றவற்றை கணக்கெடுப்புக்கு உட்படுத்த வேண்டியிருப்பதால், அதற்காக மேற்கொள்ளப்படும் பணி மற்றும் அர்ப்பணிப்பு குறித்து குழுவின் கவனத்தை ஈர்க்கப்பட்டதுடன், இதற்காக 2017 ஆம் ஆண்டிலும் ஆளுகைச் சபை மேலதிக கொடுப்பனவு வழங்குவதற்கு அனுமதி வழங்கியிருந்ததால், அதற்காக கொடுப்பனவு வழங்குவதற்கு ஆளுகைச் சபையின் அனுமதியைப் பெறுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. | |
| 2023 (02) (ii) | இந்த மென்பொருளின் கீழ் தற்போது நிறுவப்படவுள்ள நூலக மொடியுள் தரவு உள்ளீட்டுப் பணிகள் 2024.07.10 ஆம் திகதியளவில் நிறைவுசெய்ய முடியுமென ஆலோசகர் (தகவல் தொழில்நுட்பம்) குழுவிடம் தெரிவித்தார்.<br>ரூபா. 9.7 மில்லியன் பெறுமதியான அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட இந்த மென்பொருளைப் பயன்படுத்துவதற்காக (தகவல் தொழில்நுட்ப) ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதனால், அவரது சேவையைப் பயன்படுத்தி இந்த அமைப்பை நடைமுறைப்படுத்திப் பராமரிக்காமை குறித்து கணக்காய்வு வினவுதல்களும் பொது தொழில்முயற்சி பற்றிய செயற்குழுவின் (COPE) அவதானிப்புகளும் எழ வாய்ப்புள்ளதாக உதவி உள்ளக கணக்காய்வாளர் அவதானிப்புகளை முன்வைத்தார். | மென்பொருளை கொள்வனவு செய்த நிறுவனத்துடன் இணைந்து, அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. நூலக மொடியுள் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. |
| 2023 (03) (i) | பிரதான அலுவலகத்தின் மின்சாரக் கட்டணங்கள் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் பெயரில் பெறப்பட்டுள்ளதாகவும், நீர் கட்டணங்களுக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2024 ஒகஸ்ட் மாதம் முதல் நீர் கட்டணங்களை பல்கலைக்கழகத்தின் பெயரில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், பிராந்திய நிலையங்களுக்கும் அந்த கட்டணங்களை பல்கலைக்கழகத்தின் பெயரில் பெற்றுக்கொள்ளுமாறு எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் உதவிப் பதிவாளர் (பராமரிப்பு) தெரிவித்தார். | பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 2023 (03) (iv) | நீர்கொழும்பு உதவிப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லம்/விடுதிக்கு குழாய் நீரை பெற்றுக்கொள்வதற்காக தேவையான அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த நீர் இணைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை அடுத்த கூட்டத்திற்கு முன்னர் நிறைவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீர்கொழும்பு உதவிப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நீர் மீட்டர்கள் பொருத்தப்பட்டு, நீர் இணைப்பு பெறப்பட்டுள்ளது.<br>விடுதிக்கு குழாய் நீர். இணைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 2023 (04) (v) | இரண்டு வங்கிக் கணக்குகளுக்கான வங்கி கணக்கிணக்க கூற்றுகள் 2024 மே மாதம் வரை தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதாகவும், ஒரு வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்கான வங்கிச் சமன்பாடுகள் தயாரிக்கப்படவுள்ளதாகவும், வங்கிச் சமன்பாடுகள் விரைவில் தயாரிக்கப்பட்டு நிறைவுசெய்யப்படும் எனவும் பணிப்பாளர் (நிதி) குழுவிடம் தெரிவித்தார். தேவைப்பட்டால் கணக்காய்வு அலுவலர்களால் அதனைப் பரிசோதிக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். | விடயம் குறித்து பணிப்பாளர் (நிதி) அவர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |
| அ) | பாணந்துறை நிலையத்தின் காரை அப்புறப்படுத்துவதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு | அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.. |

| | | |
|---|---|---|
| | குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் சம்பந்தப்பட்ட நிரல் வரிசை அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 2024 (i) | இந்த பாடத்திட்டத்திற்கான FCAW (Flux-Cored Arc Welding) பாடநெறி 72 மணி நேரத்தில் வழங்க முடியாது என்றும், அவ்வாறு செய்தால் அதன் அங்கீகாரம் குறைந்துவிடும் என்றும், இந்த பாடத்திட்டத்திற்கான கொடுப்பனவுகளை அங்கீகரிக்கும் போது, அதற்கு அங்கீகாரம் பெறுமாறு பணிப்பாளர் (பயிற்சி) அவர்களுக்கு ஆளுகைச் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டதாகவும், ஆயினும் NVQ (National Vocational Qualification) சான்றிதழ் பெறப்படாமை குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. இந்த கற்கைநெறி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யாமல் நடாத்த வேண்டாம் என்றும், அவ்வாறு செய்வது உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு சட்டத்தை மீறுவதாகும் என்றும், அது ஒரு பாரதூரமான தவறு என்றும் குழுவின் உறுப்பினரும் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமும் குழுவிடம் வலியுறுத்தினார். | FCAW பாடநெறி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| | 2020/1PED சுற்றறிக்கையின்படி இந்த பாடத்திட்டத்திற்கான கொடுப்பனவு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக ஆளுகைச் சபையின் அனுமதியைப் பெற்று அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் குழு ஆலோசனை வழங்கியது. | நிரல் அமைச்சினால் திறைசேரியின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.. |
| | <u>கணக்காய்வு அதிகாரியின் கருத்து.</u><br>உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகை அறவிடுவது பொருத்தமானது எனவும், அதன் பொருளாதார வாடகையை மதிப்பிட்டு அந்தத் தொகையை அறவிடுவது பொருத்தமானது எனவும், அரச சொத்து பயன்படுத்தப்படுவதால் அந்த வீடுகளை முறையாக ஒப்படைக்க வேண்டும் எனவும் அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டன | மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த பெறுமதிகள் 2024 ஓகஸ்ட் மாதம் முதல் நிலுவைத் தொகையுடன் அறவிடப்பட்டு வருகின்றன. |

**<u>I11 மூன்றாம் கூட்டம்.</u>**

| தொடர் இல | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானங்கள் | பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 17-1 | முற்பண நிலுவையான ரூபா. 3.7 மில்லியன் தொகையை பதிவழிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அந்த பெறுமதிகளை பதிவழிப்பதற்கு ஆளுகைச் சபைக்கு அதிகாரம் உள்ளதெனவும், தற்போது நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதால், அடுத்த ஆளுகைச் சபைக்கு | 84/4/FN/1 என்ற இலக்கத்தின் கீழ் 84வது ஆளுகைச் சபைக்கு ஒரு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. பின்னர், ஆலோசனையின்படி 85வது ஆளுகைச் |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பித்து பதிவழிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சபையிடம் விடயங்கள் தெரிவிக்கப்பட்டு, இந்தத் தொகையை பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்த அனுமதி கிடைத்ததற்கான குறிப்புப் பத்திரம், அதை உறுதிப்படுத்துவதற்காக 86வது ஆளுகைச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ஆளுகைச் சபை புதிய அரசாங்கத்தின் நியமனத்திற்குப் பின்னர் கலைக்கப்பட்டு புதிய ஆளுகைச் சபை நியமிக்கப்பட்டுள்ளதால், மீண்டும் ஒரு ஆளுகைச் சபை பத்திரத்தை சமர்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 17-2 | விடுதிகள் தொடர்பான பரிந்துரைகளைப் பெறுவதற்காக பீடாதிபதியின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீட்டு பெறுமதிகள் கிடைத்த பின்னர், அந்தத் தொகைகளை அறவிடக்கூடிய வகையில் அடுத்த ஆளுகைச் சபையிடம் குழு அறிக்கையை சமர்ப்பித்து அனுமதி பெற்று அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீட்டுப் பெறுமதிகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி தயாரிக்கப்பட்ட குழு அறிக்கை 86வது முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதி பெறப்பட்ட பின்னர் அறவீடுகள் மேற்கொள்ளப்படும்.. |
| 18-2 | பயிற்சிப் படகுகளை அகற்றுவதற்காக சம்பந்தப்பட்ட விடயபொறுப்பு அமைச்சரின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அந்த 4 படகுகளை அகற்றும் முறை மற்றும் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதி குறித்த பரிந்துரைகளைப் பெறுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து ஒரு அதிகாரியையும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார் எனவும்,<br>அந்தப் படகுகளைப் பரிசோதிப்பதற்காக 2024.09.12 அன்று அந்த இடங்களுக்குச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் அந்த அறிக்கையை அடுத்த ஆளுகைச் சபைக்கு சமர்ப்பித்து அகற்றும் பணிகளை விரைவாக முடிக்குமாறும் பணிப்பாளர் (நிதி) தெரிவித்தார். | குழு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அப்புறப்படுத்த தீர்மானிக்கப்பட்ட படகுகளின் இயந்திரங்களை பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும், படகின் உடற்பகுதியை (hull) ஒரு கண்காட்சிக்காக பிராந்திய கல்லூரியின் வளாகத்திற்கு கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 2022 (01) | தற்போது சுனாமி கடன் நிலுவையில் இருந்து ரூபா. 10,000.00 செலுத்தப்பட்டுள்ளதாகவும், மீதித் தொகையான ரூபா. 14,003.00 மாத்திரமே அறவிடப்பட வேண்டியுள்ளதாகவும் பணிப்பாளர் (நிதி) குழுவிடம் தெரிவித்தார். | ரூபா. 14,003.00 நிலுவைத் தொகை அறவிடப்படும். |
| 2022 (03) (ii) | மாணவர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சைகளை நடாத்துவதற்காக பதவியணியினறுக்கான கொடுப்பனவு முறைமைக்கு ஆளுகைச் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், நிதி ஒழுங்கு விதிமுறைகளின்படி திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது., | இதற்கான கொடுப்பனவுகளுக்காக தயாரிக்கப்பட்ட கட்டணங்கள் திருத்தப்பட்டு ஆளுகைச் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், அந்த அனுமதி கிடைத்ததன் பின்னர் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திடம் அனுப்பப்படும். |
| 2022 (02) (i) | புதிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக, கடந்த கூட்டத்தில் தீர்மானித்தபடி 84வது ஆளுகைச் சபைக்கு ஒரு | தலைமை அலுவலகம், 07 பிராந்திய நிலையங்கள் மற்றும் பீடங்களின் |

| | | |
|---|---|---|
| | பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், அதற்காக முகம் மற்றும் கைவிரல் அடையாளம் ஆகிய இரண்டு முறைகளிலும் சேவைக்கு வருகை தரக்கூடிய உபகரணங்கள் தற்போது TVEC நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு செயற்பாட்டில் இருப்பதாகவும், அதற்கான விவரக்குறிப்புகளை அந்த நிறுவனங்களிடமிருந்து பெற்று, அந்த உபகரணங்களை பல்கலைக்கழகத்தின் அனைத்து பிராந்திய நிலையங்கள்/பீடங்களிலும் நிறுவி, அதற்கான முன்னேற்றத்தை அடுத்த குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. | பயன்பாட்டிற்காக புதிய கைவிரல் அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br>2025.01.20 ஆம் திகதிக்கு முன்னர் அந்தப் பணிகள் நிறுவப்பட்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| 2021 (03) | 2022 ஆம் ஆண்டுக்கான பின்னேற்பு பணிகளை விரைவில் முடிக்குமாறும், 2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்புப் பணிகளையும் ஆரம்பித்து, சுற்றறிக்கையின்படி அந்தப் பணிகளை முடிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டுக்கான பின்னேற்புப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. 2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்படாததால், 2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான பொருட்கள் கணக்கெடுப்புப் பணிகளை சுற்றறிக்கையின்படி ஆரம்பிக்குமாறு உதவிப் பதிவாளருக்கு (களஞ்சியம்) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| 2023 (02) (ii) | 9.7 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட EMIS மென்பொருளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலரை, நிறுவனத்தின் குறித்த பணியை மட்டுமே செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், அந்த அலுவலர் பல்கலைக்கழகத்தின் நிரந்தர அலுவலர் ஒருவரின் கீழ் வைக்கப்பட்டு, அவரது மேற்பார்வையின் கீழ் இப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு அறிவுறுத்தியது. | இப்பணியைச் செய்வதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர், பரீட்சைப் பிரிவின் பணிகளுக்காகப் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். அந்த அலுவலர் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் (பரீட்சைகள்) மேற்பார்வையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். |
| | மென்பொருளை நடைமுறைப்படுத்துவதற்காக, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு அலுவலர், பிரிவுத் தலைவர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலர் ஆகியோர் உள்ளடங்கலாக, உபவேந்தரின் தலைமையில் கூட்டங்கள் நடத்தி, இக்காரியத்தை நிறைவேற்றி, அடுத்த கூட்டத்திற்கு அதன் முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு குழு அறிவுறுத்தியது. | உபவேந்தரும் சம்பந்தப்பட்ட நிறுவனமும் ஒரு கூட்டத்தை நடாத்தியுள்ளன, மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>. |
| | இந்த மென்பொருளுக்குரிய நூலக தொகுதிக்கு (Library Module) தரவுகளை உள்ளீடு செய்யும் பணிகள், சேவை வழங்கும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அந்தப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை என்றும் நூலகப் பொறுப்பு அதிகாரி தெரிவித்தார். | இந்த பணி தற்போது நிறைவடையவில்லை என்பதுடன், சேவை வழங்கும் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| | நிலையான சொத்துக்கள் பதிவேட்டையும் இந்த மென்பொருளுடன் இணைத்து அதற்குரிய தரவுகளை உள்ளிடுமாறும், அந்தப் பணிகளை 2022 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்ட போதிலும், அந்தப் பணி இதுவரை நிறைவேற்றப்படாமை தொடர்பாக நிரல் வரிசை அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. | இப்பணியை நிறைவேற்றுவதற்காக, தேவையான தகவல் அமைப்பு நிறுவப்பட்ட நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.. |

| | | |
|---|---|---|
| | | |
| | எனவே, கடந்த வருடங்களின் சொத்துக்கள் உள்ளடக்கப்படும் செய்யப்படும் வரை, 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு, அங்கிருந்து புதுப்பிக்குமாறு பணிப்பாளரிடம் (நிதி) அறிவுறுத்தப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டு வருகிறது. |
| 2023 (03) (i) | பிரதான அலுவலகத்தின் மின்சாரக் கட்டணங்கள் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்டு வருவதாகவும், நீர்க் கட்டணங்களுக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2024 ஆகஸ்ட் மாதம் முதல் நீர்க் கட்டணங்களை பல்கலைக்கழகத்தின் பெயரில் பெற முடியும் என்றும், பிராந்திய நிலையங்களுக்கும் அதேபோன்று பல்கலைக்கழகத்தின் பெயரில் கட்டணங்களைப் பெறுவதற்கான எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் உதவிப் பதிவாளர் (பராமரிப்பு) தெரிவித்தார். | இப் பணிக்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. |
| 2023 (03) (iv) | I. பிரதான அலுவலக விடுதிகளிலும் தற்போது அலுவலகத்தின் குழாய் நீர்மானி மூலம் நீர் பெறப்படுவதால், அதற்குத் தனியான நீர்மானிகளைப் பொருத்துதல் வேண்டும் என்றும், அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. | பிரதான அலுவலக விடுதிகளுக்கு நீர்மானிகளைப் பொருத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| | இரண்டு நடப்புக் கணக்குகளுக்கான கணக்கிணக்க கூற்றுகள் 2024 யூன் மாதம் வரை தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதாகவும், மற்றைய கணக்கின் மே மாதம் வரையான கணக்கிணக்க கூற்றுகள் நிறைவடைந்துள்ளதாகவும், கடந்த வருடத்தில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் ஊழியர் பற்றாக்குறையே இந்த தாமதங்களுக்கு காரணம் எனவும் பணிப்பாளர் (நிதி) குழுவிடம் தெரிவித்தார். | பல்கலைக்கழகத்தின் அனைத்து நடப்புக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்கங்களையும் நிகழ்நேரத்தில் பராமரிக்குமாறு பணிப்பாளருக்கு (நிதி) அறிவுறுத்தப்பட்டுள்ளது.. |
| 2023 (04) (v) | பல்கலைக்கழகத்தின் கணக்குகள் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பதவியான, உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் கடமையாற்றும் அலுவலரின் சேவை கணக்குகள் பிரிவுக்குப் பெறப்படாதது தொடர்பில் இதற்கு முன்னரும் குழுவினால் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணி இதுவரை நிறைவேற்றப்படாதது தொடர்பில் நிரல் வரிசை அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரின் அவதானத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும் இந்த விடயம் இறுதி கணக்காய்வு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் நிலவும் ஊழியர் வெற்றிடங்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கைகள் தயாரித்தல், ஒருங்கிணைந்த திட்டங்களை தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றங்களை அமைச்சுக்கு/ சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்புதல் போன்ற ஒருங்கிணைப்புப் பணிகள் இந்த அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| | பல்கலைக்கழகத்தின் கணக்குகள் பிரிவு, தொழில்சார் பயிற்சிப் பிரிவு மற்றும் பரீட்சைப் பிரிவு ஆகிய பிரிவுகளில் முகாமைத்துவ உதவியாளர் பற்றாக்குறை நிலவுவதனால், | தற்போது, அனுமதி வழங்கப்பட்டுள்ள 60 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு |

| | | |
|---|---|---|
| | அப்பிரிவுகளின் அன்றாடப் பணிகளைச் செய்ய முடியாமை குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அதனால், தற்போது நிலவும் வெற்றிடங்களுக்கான முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவினால் உதவிப் பதிவாளரை (மனித வளம்) அறிவுறுத்தப்பட்டது. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| ஏ) | பணதுறை நிலையத்தில் அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட காரை அகற்றுவதற்காக, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அல்லது தொழில்சார் பயிற்சி நிறுவனமொன்றின் அதிகாரியொருவரைப் பெயரிடச் செய்து, இந்தக் குழு அறிக்கையைப் பெற்று, மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானது என குழு பரிந்துரைத்தது.<br>இவ்வாறு அரச வளங்கள் வீணடிக்கப்படுவதற்கு இடமளிப்பது தாபன விதிக்கோவையின் விதிகளின்படி ஒரு குற்றம் என கணக்காய்வு அலுவலர்கள் அவதானிப்புகளை முன்வைத்தனர். | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து ஒரு அலுவலர் பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார். மேலும் அந்தப் பணியை விரைவாக முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 2024 (i) | இந்த கற்கைநெறியும் உள்ளடக்கி, சுய வருமான நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுச் செயன்முறை தயாரிக்கப்பட்டு ஆளுகைச் சபையின் அனுமதி பெறப்பட்ட போதிலும், அமைச்சுச் செயலாளர் ஊடாக திறைசேரியின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவால் பணிப்பாளரை (நிதி) அறிவுறுத்தப்பட்டது. | வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். |
| 2024 (iii) | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்துக்கான பட்டப்படிப்பு (லோகு) கொள்வனவு தொடர்பான கணக்காய்வு வினவுதல் குறித்து, நிரல் வரிசை அமைச்சுக்கு பொறுப்பான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தல்களின்படி, ஒரு குழுவை நியமித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும், அந்தக் குழுவுக்கு நிரல் வரிசை அமைச்சுக்கு பொறுப்பான பிரதிநிதியொருவரைப் பெயரிட்டு அனுப்புமாறு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்தப் பிரதிநிதி பெயரிடப்பட்டு அனுப்பப்பட்ட பின்னர், அக்குழுவை நியமித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் உதவி உள்ளக கணக்காய்வாளர் குழுவிடம் தெரிவித்தார். | இந்த விடயம் தொடர்பான குழு அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை 86 ஆவது ஆளுகை குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 2024 (03) (i) | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு சுற்றுலா பங்களா தொடர்பாக கணக்காய்வு அறிக்கையால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின்படி, சுற்றுலா பங்களாவை முன்பதிவு செய்யும் பணிகள் பல்கலைக்கழகத்தின் தலைமை அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும். எனவே, முன்பதிவுகளைப் பராமரிப்பதற்கான ஆவணங்கள், பணப் பரிவர்த்தனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவு முறையாகப் பொறுப்பேற்க வேண்டும். | இவ்வலுவல் குறித்து கவனம் செலுத்தப்பட்டு, சுற்றுலா பங்களாவை முன்பதிவு செய்யும் பணிகள் பல்கலைக்கழகத்தின் பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவினால் மட்டுமே செய்யப்படுகின்றன. ஆவணங்களைப் பராமரித்தல், பணப் பரிவர்த்தனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 2024 (03) (ii) | மட்டக்களப்பு சுற்றுலா பங்களாவின் தகவல்களை இணையதளத்தில் வெளியிடுதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் இணையதளம் வழியாக முன்பதிவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல். | இந்த விடயம் குறித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 2024 (03) (iii) | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு ஆலோசகர் இன்னும் சேவையில் இருப்பதால், அந்த அலுவலர் தங்கியிருந்த நாட்களுக்கு ஆளுகைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அறை கட்டணங்களை அறவிடப்பட்டு, அடுத்த கூட்டத்திற்கு அறிக்கையிடுமாறும், அவ்வாறு அந்த அலுவலரிடமிருந்து அறவிட முடியாவிட்டால், அனுமதி வழங்கிய அலுவலரிடமிருந்து அந்தத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கூறப்பட்டது. | இந்த அறவிடல்கள் தொடர்பாக 86 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டத்தில் ஒரு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அனுமதி கிடைத்தவுடன் அந்த அறவிடல்கள் மேற்கொள்ளப்படும். |
| 2024 (03) (iv) | சுற்றுலா பங்களா குறித்து உள்ளக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் அந்த சுற்றுலா பங்களாவை பராமரிப்பது குறித்து அமைச்சுக்கு பொறுப்பான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதற்காக ஒரு குழுவை நியமித்து, அதன் அறிக்கையை ஆளுகைச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சுக்கு பொறுப்பான செயலாளர் அறிவுறுத்தியுள்ளமையினால், அந்த அறிவுறுத்தல்களின்படி செயற்படுதல். | இதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, குழு அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை 86 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 2024 (03) (v) | i. உதவி கல்லூரி ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, நிரல் வரிசை அமைச்சு ஊடாக முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>ii. பணிப்பாளர் (பயிற்சி) பதவி மற்றும் 14 ஆலோசகர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகளுக்கு பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக உதவிப் பதிவாளர் (மனித வளம்) தெரிவித்தார்.<br>. | I. உதவி கல்லூரி ஆலோசகர் பதவிகளுக்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.<br>II. பணிப்பாளர் (பயிற்சி) பதவி மற்றும் 14 ஆலோசகர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 2024 (03) (vi) | தொழில்சார் பயிற்சிப் பிரிவுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது, பல்கலைக்கழகப் பதவிகளுக்கும் தொழில்சார் பயிற்சிப் பிரிவின் பதவிகளுக்கும் இரண்டு சம்பளக் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளமையால் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக குழுவிடம் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.<br>இது குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது, மேலும் இதற்காக ஆளுகைச் சபையின் அனுமதியைப் பெற்று, ஒரு அமைச்சரவைப் பத்திரம் தயாரித்து, அமைச்சரவை மட்டத்தில் ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, அதன் பின்னர் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கொள்கை ரீதியான விடயம் குறித்து நிரல் வரிசை அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு வருகிறது. |
| 2024 (03) (vii) | தொழில்சார் பயிற்சிப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள கல்விசார் பதவியணியை பிராந்திய நிலையங்களுக்கிடையில் பரிமாற்றம் செய்யக்கூடிய ஒரு திட்டத்தைத் தயாரிக்குமாறு பிராந்திய நிலையங்களின் உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | இதன் முன்னேற்றம் குறித்து வரும் குழுக் கூட்டத்தில் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | பணிப்பாளர் (பயிற்சி) பதில் கடமையாற்றும் அலுவலர் தெரிவித்தார்.<br>கல்விசார் பதவியணியிடமிருந்து அதிகபட்ச சேவையைப் பெறுவதற்காக, கல்விசார் பதவியணியின் பயன்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்து ஆளுகைச் சபையிடம் சமர்ப்பித்தல். | |
| 2024 (03) (viii) | யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு அலகுகளின் உதவிப் பணிப்பாளர் பதவிகளின் கடமைகளை உள்ளடக்கியிருந்த போதிலும், நிரந்தரப் பதவிக்குரிய விரிவுரை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அந்த அதிகாரிகளுக்கு எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக உதவிப் பதிவாளர் (மனித வளம்) அவர்களின் கவனம் கோரப்பட்டது. | இது குறித்து மட்டக்களப்பு உதவிப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 2024 (03) (iX) | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவியணியின் சேவைக்கால நீடிப்புகளை வழங்கும்போது, அவர்களின் கல்வி கற்பித்தல் நேரங்களைக் குறிப்பிட்டு ஆளுகைச் சபை கூட்டத்திற்குப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் | இந்த பணி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 2024 (03) (X) | நிரந்தர/ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கல்விசார் ஊழியர்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு அதிக பங்களிப்பை வழங்கியிருந்தால், அவர்களை மதிப்பீடு செய்வதற்கு சாத்தியமிருந்தால், அது குறித்து கல்விச் சபையின் கவனத்திற்கு கொண்டு சென்று, அதன் பரிந்துரைகளின்படி நடவடிக்கை எடுத்தல். | இந்த பணி நிறைவேற்றப்படவில்லை, எதிர்காலத்தில் இது குறித்து கவனம் செலுத்தப்படும். |

## IVவது கூட்டம்.

ஆளுகைச் சபை உறுப்பினர்களின் நியமனம் தாமதமானதால் 2024 (IV)வது கூட்டத்தை நடாத்த முடியவில்லை.

**சிரேஷ்ட பேராசிரியர் சட்டத்தரணி வசந்த ரத்நாயக்க Ph.D**
**துணைவேந்தர்,**
**இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.**

# 08. பகுப்பாய்வுடன் கூடிய தொழிற்பாட்டு செயலாற்றுகை 2024

(உ) இலங்கை அரச துறை கணக்கட்டு நியமம் 10 இன் படி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 20 பாடநெறிகள் தொடர்பாக மொத்தமாக ரூபா. 37,611,680/- வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. எனினும், ஒரு பாடநெறிக்குரிய ஈட்டிய வருமானம் கணக்கிடப்படாது அதற்கான செலவு ரூபா 929,445/- மாத்திரமே நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தது. அதேபோல், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 03 பாடநெறிகள் தொடர்பாக ரூபா. 5,725,950/- வருமானம் கணக்கு வைக்கப்பட்ட போதிலும், அதற்கான எவ்வித செலவும் நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்படவில்லை.

(ஊ) இலங்கை அரச துறை கணக்கட்டு நியமம் 11 இன்படி, பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பெறப்பட்ட நிதியானது உரிய ஆண்டில் வருமானமாக இனங்காணப்பட வேண்டும். ஆயினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கு முன்னர் அரசாங்கத்தாலும் கருத் திட்டங்களாலும் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட மொத்தமான ரூபா. 955,123,309/- ஆன பிரதான வருமானம், வருமானமாக இனங்காணப்படாமல், தனிப்பட்ட ஒதுக்கீடுகளாக நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக, திரண்ட மிகை அத்தொகையால் குறைவாகவும், சம்பந்தப்பட்ட மூலதன மற்றும் வருமான ஒதுக்கீட்டு மதிப்பு அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(எ) பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட்டு, மீண்டும் செலுத்தப்பட வேண்டிய தொகையான ரூபா 1,550,832/- பெறுமதியான நூலக வைப்பீடுகள், நிதிநிலை அறிக்கையில் உரிமை பங்குகளின் கீழ் மூலதன மற்றும் ஒதுக்கீடுகளாக காட்டப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி நாளுக்கான உரிமை பங்குகளின் மதிப்பு அத்தொகையால் அதிகமாகவும், பொறுப்புக்களின் மதிப்பு அத்தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) பல்கலைக்கழகப் ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றபோது, பல்கலைக்கழகத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறியதன் காரணமாக, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து மீளாய்வு செய்யப்பட்ட

ஆண்டில் பணமாகப் பெறப்பட்ட ரூபா. 3,119,677/- பெறுமதி மட்டுமே பேரேட்டுக் கணக்கில் இனங்காணப்பட்டிருந்தது. அத்துடன், உடன்படிக்கை மீறல் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தப் பெறுமதி ரூபா. 2,966,856/- ஆன பெறுமதி பெறப்பட வேண்டிய பணமாக குறிக்கப்படாததன் காரணமாக, நடப்புச் சொத்துக்கள் மற்றும் உரிமை பங்குகளின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் என்னால் மேற்கொண்ட பணிகளை அடிப்படையாகக்கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், குறித்த விடயங்களை அறிக்கையிடல் வேண்டும். அந்த விடயம் தொடர்பில் நான் எதுவும் அறிக்கையிடவில்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி

பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

## 2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

**2.1** 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2** கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 -2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

| | சட்டங்கள்/ ஏற்பாடுகளின் தொடர் | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 396 (ஈ) | 06 மாதங்களுக்கு அதிகமான காலப் பகுதிக்கு கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத பெறுமத ரூபா.904,298 ஆன 16 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(2)ஆ | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக 09 சந்தர்ப்பங்களில் ரூபா.103,000 தொடக்கம் ரூபா.1,047,596 வரையிலான எல்லைக்குள் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2023 சனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் 5 ஆவது பிரிவு | பல்கலைக்கழக ஆசிரியர்கள் வெளிநாடு செல்கையில் ஏற்படுத்திக் கொள்கின்ற முறி உடன்படிக்கை மீறப்பட்ட 06 ஆசிரியர்களிடமிருந்து மீளாய்விற்கான ஆண்டில் அறிவிடப்பட்டிருந்த ரூபா.3,119,677 ஆன தொகை திறைசேரியிடம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | 2010 ஆம் ஆண்டு 12 ஆம் திகதிய 445 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | நியதிச் சட்ட சபைகளுக்கான பாதுகாப்பு சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது, அரசாங்கத்திற்குரிய நிறுவனங்களுக்கு சொந்தமான பாதுகாப்பு துறைகளில் சிறந்த அனுபவங்களுடன் கூடிய பதவியணி உள்ளதால் அந்தச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னர்/ தற்போது காணப்படும் சேவை உடன்படிக்கைகளை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு முன்னர் அரசாங்கத்திற்கு சொந்தமான பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அந்தச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு முடியுமா என்பது தொடர்பாக உசாவுதல் வேண்டுமாயினும், அதற்கு முரணாக 2024 |

| | | |
|---|---|---|
| | | ஆம் ஆண்டு யூன் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 மே 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்காக பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ரூபா.1,262,520 ஐ செலுத்துவதற்கு தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

| தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் | இணங்காமை |
|---|---|
| 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் 66 ஆவது பிரிவு | 2014 மார்ச் 26 ஆம் திகதிய மற்றும் 06/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை மூலம் விதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆகிய இரு பிரிவுகளுக்காகவும் பொழுதுபோக்கு கொடுப்பனவாக சட்டத்திற்கு முரணாக ரூபா.2,619,166 செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக,

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) பிரதான அலுவலக வளாகத்தில் ஐந்து மாடி கட்டிடத்தின் நிருமாணிப்புகளின் பொருட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக ஆலோசனை கட்டணங்கள் ரூபா.6,126,551 ம், மண் பாதுகாப்பு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ரூபா. 367,557 ம் என்ற வகையில் மொத்த பெறுமதி ரூபா.6,494,108 ஆன தொகை கட்டிடங்களின் தொகுதியை நிருமாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஆரம்ப கட்ட பணிகள் இதுவரை நிறைவேற்றப்படாமை காரணமாக பயனற்ற செலவினமாக காணப்பட்டது. அதேபோன்று சலுகை கடன் வசதி பெற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் சுற்றாடல் சான்றிதழ் அடங்கலான செலவினங்களின் பொருட்டு ரூபா.1,513,936 ஆன செலவினம் இதன் பொருட்டு மேற்கொள்ளப்டப்டிருந்தது.

(ஆ) 2018 ஆம் ஆண்டில் கல்வி மற்றும் நிருவாக பணிகளை பராமரிப்பதற்காக வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது, கட்டிடங்களின் வாடகை, நீர் மற்றும் மின்சாரம் பொருட்டான செலவினமாக ஒழுங்குமுறையில் ரூபா.200,724,819 ம், ரூபா.21,421,803 செலுத்தப்பட்டிருநச்தது. 2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா.மில்லியன் 300 ஆன ஒதுக்கீடு பயன்படுத்தி கட்டிடம் நிருமாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தால், கட்டிடங்களின் வாடகையாக வெளியக தரப்புகளுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகையை மீதப்படுத்துவதற்கும் பல்கலைக்கழகத்திடம் சொத்துக்களை பெறுவதற்கும் இயன்று இருக்கும்.

(இ) உலக வங்கி நிதியின் கீழ் (AHEAD) இன் கீழ், பல்கலைக்கழகத்தின் மாணவர் நடவடிக்கைகள், பரீட்சைகள், நிதிசார், நிருவாக மற்றும் ஏனைய பொதுவான நடவடிக்கைகளை தன்னியக்கப்படுத்துவதற்காக (Integrated Education Management Information System (IEMIS) என்ற பெயரில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி தொடக்கம் 2022 பெப்ருவரி 26 (180 நாட்கள்) ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்காக தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த தனியார் நிறுவனம் 2027 ஆம் ஆண்டு பெப்ருவரி 06 ஆம் திகதி வரை இந்த தகவல் முறைமைக்கு ஏற்புடையதான சேவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2025 ஆம் ஆண்டு யூன் 04 ஆம் திகதியிலும் இந்த கருத்திட்டம் மூலம் உருவாக்கப்பட்ட மாதிரிகள் (Modules)
14 ம் உரிய வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக செவை வழங்கும் செலவினம் ரூபா.2,675,400 ஆன தொகை அடங்கலாக, அதற்காக செலவிடப்பட்ட ரூபா.9,882,600 ஆன மொத்த தொகை பயனற்று இருந்தது. இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு யூன் 05 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்து ரூபா.80,000 ம் ஆன கொடுப்பனவு இதற்காக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மொத்தம் ரூபா.13,329,183 ஆன 03 ஆண்டுகளை கடந்துள்ள கிடைக்கப்பெற வேண்டிய நிலுவையை அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் காணப்படும் 01 ஆண்டு தொடக்கம் 02 ஆண்டுகள் வரையில் உள்ள ரூபா.3,546,667 மற்றும் 02 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் காணப்படும் ரூபா.4,012,157 ஆன நிலுவை தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 02 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் காணப்படும் ரூபா.2,496,836 ஆன திரண்ட செலவினம் தீர்வு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) பல்கலைக்கழகம் மற்றும் பிராந்திய நிறுவனத்திற்கு ஏற்புடையதான அங்கீகரிக்கப்பட்ட 32 பதவிகளுக்கு ஏற்புடையதாக 158 ஊழியர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டதுடன், 08 பதவிகளின் பொருட்டு 37 ஊழியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(எ) 08 பதவிகளுக்காக மிகையாக இருந்த 09 உத்தியோகத்தர்களின் பதவிகள் அங்கீகரிக்கப்படாது, குறித்த உத்தியோகத்தர்களை ஆட்சேரப்புச் செய்து சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா.12,351,193 ஐ மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருநச்தது.

(ஏ) நிறுவனம் மற்றும் உப நிறுவனங்களுக்க ஏற்புடையதாக சேவையாற்றும் பதவியணிக்காக பணிக்கொடை கணக்கிடல், அட்டவணைக்கமைவாக மொத்தம் 180 ஆயினும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மொத்தம் 213 ஆதல் காரணமாக 33 ஊழியர்களின் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

ஜீ.எச்.பீ. தர்மபால
கணக்காய்வாளர் அதிபதி.(ப.க)

# 11. கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கான தெளிவுபடுத்தல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මාගේ අංකය.<br>என் எண்<br>My No. | OCU/05/02/36/2024/FA/05(i) | ඔබේ අංකය.<br>உங்கள்எண்.<br>Your No. | VOT/E/OUSL/2024/FA/05 | දිනය.<br>தினம்.<br>Date. | 2025.10.31 |

திரு. கே. கே. எஸ். ஜயகொடி,
பிரதி கணக்காய்வாளர் அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72,
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான, ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

மேற்படி விடயம் தொடர்பாக தங்களது சமஇலக்க , 2025.09.25 திகதிய கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்காக, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய முன்னேற்றத்தைக் குறிப்பிடப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

சிரேஷ்ட பேராசிரியர் நளின் ரத்நாயக்க (PhD),
துணைவேந்தர்,
இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

பிரதிகள்:
01.செயலாளர் - கல்வி அமைச்சு.
02 செயலாளர் - நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை.

(அ) சாரதி பதவியில் பணியாற்றிய திரு. லால் ரஞ்சித் பத்திரண என்பவரால், கணக்காய்வு வினவல் தொடர்பாக, விடுதி வாடகையைச் செலுத்த வேண்டியிருந்ததால், அந்த விடயத்தை தீர்க்கப்படும் வரை அவரது பணிக்கொடை வழங்குதல் தாமதமாகியது. இதனால், ரூபா. 70,630.00 மிகை கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்தது. இந்தத் தொகையைத் தவிர, 2025.10.22 தேதி வரை மிகை கட்டணம் செலுத்தியதாகவோ செலுத்துமாறு கோரும் அறிவிப்போ பல்கலைக்கழகத்திற்கு இதுவரை அனுப்பப்படவில்லை.

(ஆ) கணக்காய்வு விடயத்துடன் இணங்குவதுடன், எதிர்காலத்தில் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின்படி செயற்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) 2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம், திருத்தங்கள் 'நாளேட்டுப் பதிவுகள்' (Journal Entries) இலக்கம் 03 மற்றும் 04 ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) "கணக்காய்வு செய்யப்பட்ட விடயத்துடன் இணங்கவில்லை. வினவலில் பாடநெறிகள் நடாத்துவதன் மூலம் பெறப்பட்ட வருவாயாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 22,008,750.00 ஆனது, அந்த ஆண்டின் இலாபத்திற்கு பங்களிக்கக்கூடாது. தொடர்புடைய பாடநெறிகளை நடாத்துவதற்கான கொடுப்பனவுகள் 1 ஆம் ஆண்டு முதல் 3 ஆம் ஆண்டு வரை செய்யப்படுகின்றன. அப் பாடநெறியின் உண்மையான இலாபம், பாடநெறி முடிவடையும் ஆண்டிற்குரிய நிதிநிலைமை அறிக்கையில் உள்ளடக்கப்படும் வரை, அந்த வருமானம் ஒரு நடப்புப் பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்த நிலைமை கணக்கியல் கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இலங்கை அரச துறை கணக்கியல் தரநிலை இலக்கம் 3 இன் பந்தி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின்படி கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, நிதிநிலைமை அறிக்கையில் 'நடப்புப் பொறுப்புகளின்' கீழும், 'உரிமைமைகள் மாற்ற அறிக்கையில்' உள்ள அதிகப்படியான தொகையிலிருந்து நீக்கியும் கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

(உ) கடல்சார் தளவாட மற்றும் முகாமைத்துவ டிப்ளோமா (Diploma in Maritime Logistics & Management) பாடநெறிக்கான வருமானம் முந்தைய ஆண்டில் பெறப்பட்டுள்ளதுடன்,. அது, குறிப்பு இலக்கம் 19 இன் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட குறிப்பில், முந்தைய ஆண்டிலிருந்து பிற்போடப்பட்ட ரூபா. 1,537,275.00 என்ற வருமானத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ளது.

(ஊ) கணக்காய்வு செய்யப்பட்ட விடயம் குறித்து, அது அடுத்து வரவிருக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) கணக்காய்வு செய்யப்பட்ட விடயத்துடன் இணங்குவதுடன்,. 2025 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் திருத்தம் செய்து சமர்ப்பிக்கப்படும்.

(ஏ) கணக்காய்வு செய்யப்பட்ட விடயம் குறித்து இணங்குவதுடன், 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது, சரியான கணக்குகளில் அது உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும்.

2.2

## 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்காதிருத்தல்

(அ) நிதி ஒழுங்குவிதி 396 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இலக்கம் 01/2020 மற்றும் ஆகஸ்ட் 28 ஆம் திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371 (2) (ஆ) பிரிவை அறிந்ததன் பின்னரே பல்கலைக்கழகம் செயற்பட்டது. இருப்பினும், தற்போது நிலவும் பணவீக்கச் சூழ்நிலை காரணமாக, பல்கலைக்கழகத்தால் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சிகளின் செலவுகள் அதிகரித்ததால், அந்நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, அதற்கான முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, VOT/E/OCUSL/2024/4/ii இலக்கம் கொண்ட வினவல் எழுப்பப்பட்டுள்ளதுடன், அதில், 09 சந்தர்ப்பங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வினவலில் 06 சந்தர்ப்பங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கான விளக்கம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்தச் சந்தர்ப்பங்களுக்குள் உட்படாத ரூபா. 1,047,596/- மதிப்புள்ள முற்பணம் தொடர்பாகவும் கீழே விளக்கம் அளிக்கிறேன்.

| தொ.இல | முற்பண மீதி (ரூபா.) | விளக்கம் |
|---|---|---|
| 1. | 277,000 | இது, ஒரு அரச நிறுவனமான (NAQDA) நிறுவனத்திற்குக் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இது, அந்தச் சேவையைப் பெறுவதற்கு முன்னர் கட்டாயம் முன்னர் பணம் செலுத்தப்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்தச் செலவு, பயிற்சிச் செலவாக நேரடியாகக் கணக்கில் வைக்கப்படாமல், இந்தச் சேவை பெறப்படுவது உறுதி செய்யப்படும் வரை முற்பணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கொடுப்பனவு பணமாக கொடுக்கப்படவில்லை; மாறாக, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பெயரில் கோடிடப்பட்ட காசோலையாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிதி வேறு தரப்பினருக்கு வழங்கப்படும்போது ஏற்படக்கூடிய நிதித் தவறான பயன்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அத்துடன், இவ்வாறான சந்தர்ப்பங்களில், முற்பணம் வழங்குவதற்கான உச்ச வரம்பான ரூபா. 100,000/- ஐ தாண்டிய சந்தர்ப்பங்களில், திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தின் முன் அனுமதியுடன் அதனைக் கையாள முயற்சிப்பது நடைமுறையில் சாத்தியமற்றது. |
| 2. | 153,432 | Open Water Diver பாடநெறியின் செலவுகளைச் சமாளிப்பதற்காக அது தங்கல்ல பிராந்திய நிலையத்தின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| 3. | 130,000 | திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (Capacity Development Program) பதவியணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேவையான மண்டப வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்ட பணமாகும். சம்பந்தப்பட்ட வசதிகளைப் பெறுவதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு சந்தர்ப்பமாகும். |
| 4. | 347,000 | கடற்படைப் பொறியியல் பட்டப்படிப்புப் பாடத்திட்டத்தை திருத்துவதற்காக நடைபெற்ற செயலமர்வுக்குத் தேவையான மண்டப வசதிகள் மற்றும் ஏனைய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இது செலுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு சந்தர்ப்பமாகும். |
| 5. | 500,000 | இது, பட்டமளிப்பு விழாவிற்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தை ஒதுக்குவதற்காக, அந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு முன் பணம் செலுத்தும் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.. இந்தச் சேவையைப் பெறுவதற்கு முன்னர் கட்டாயம் பணம் செலுத்தப்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்தச் செலவு, நேரடியாகப் பயிற்சி செலவாக கணக்கில் வைக்கப்படாமல், இந்தச் சேவை பெறப்படுவது உறுதி செய்யப்படும் வரை முற்பணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. இது முற்பணக் கணக்கில் பதியப்பட்டிருந்தாலும், இந்தக் கொடுப்பனவு பணமாகக் (Cash) கொடுக்கப்படவில்லை. மாறாக, சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு குறுக்கு கோடிடப்பட்ட காசோலையாக (Crossed Cheque) வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பணத்தை வேறொரு தரப்பினருக்கு வழங்கும் போது ஏற்படக்கூடிய முறைகேடுகளுக்கான வாய்ப்பில்லை. மேலும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில், முற்பணம் வழங்கும் போது உள்ள உச்ச வரம்பான ரூபா. 100,000/- என்ற எல்லையைத் தாண்டிய சந்தர்ப்பங்களில், திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடமிருந்து (Department of Treasury Operations) முன் அனுமதி பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது ஆகும். |
| 6. | 265,870 | இது, 2025 ஆம் ஆண்டிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்குத் தேவையான தகுதிகாண் தேர்வுகளை நடாத்துவதற்குத் தேவையான மண்டப வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முற்பணமாக வழங்கப்பட்டது. ஆனந்த கல்லூரிக்கு (Ananda College) மண்டபத்தை முன்பதிவு செய்வதற்காக, முன்னரே செலுத்தப்பட வேண்டிய ஒரு கொடுப்பனவாகும். இந்தச் சேவையைப் பெறுவதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்தச் சேவை பெறப்படுவதை உறதிப்படுத்தும் வரை முற்பணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. இது முற்பணக் கணக்கில் பதியப்பட்டிருந்தாலும், இந்தக் கொடுப்பனவு பணமாகக் (Cash) கொடுக்கப்படவில்லை. மாறாக, சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு குறுக்கு கோடிடப்பட்ட காசோலையாக (Crossed Cheque) வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பணத்தை வேறொரு தரப்பினருக்கு வழங்கும் போது ஏற்படக்கூடிய முறைகேடுகளுக்கான வாய்ப்பில்லை. மேலும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில், முற்பணம் வழங்கும் போது உள்ள உச்ச வரம்பான ரூபா. 100,000/- என்ற எல்லையைத் தாண்டிய சந்தர்ப்பங்களில், திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடமிருந்து (Department of Treasury Operations) முன் அனுமதி (Prior Approval) பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது |
| 7. | 1,047,596 | இது, பட்டமளிப்பு விழா பொருட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தை (BMICH) ஒதுக்குவதற்கு, அந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு முன் பணம் செலுத்தும் கொடுப்பணவுக்காக வழங்கப்பட்டது. இந்தச் சேவையைப் பெறுவதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்தச் செலவு, நேரடியாகப் பயிற்சி செலவாக கணக்கில் வைக்கப்படாமல், இந்தச் சேவை பெறப்படுவது உறுதி செய்யப்படும் வரை முற்பணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. இது முற்பணக் கணக்கில் |

| | | |
|---|---|---|
| | | பதியப்பட்டிருந்தாலும், இந்தக் கொடுப்பனவு பணமாகக் (Cash) கொடுக்கப்படவில்லை. மாறாக, சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு குறுக்கு கோடிடப்பட்ட காசோலையாக (Crossed Cheque) வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பணத்தை வேறொரு தரப்பினருக்கு வழங்கும் போது ஏற்படக்கூடிய முறைகேடுகளுக்கான வாய்ப்பில்லை. மேலும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில், முற்பணம் வழங்கும் போது உள்ள உச்ச வரம்பான ரூபா. 100,000/- என்ற எல்லையைத் தாண்டிய சந்தர்ப்பங்களில், திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடமிருந்து (Department of Treasury Operations) முன் அனுமதி பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது |

(இ) வினவலில் சுட்டிக்காட்டப்பட்ட 2023 சனவரி 18 ஆம் திகதியிட்டப்பட்ட BD/HRD/126/214/19/2023 இலக்கம் கொண்ட, திறைசேரி செயலாளரால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2025.10.10 ஆம் திகதி காசோலை இல. 150833 மூலம் அது அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)

(ஈ) தொடர்புடைய சுற்றறிக்கை 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்தாலும், 2024 ஆம் ஆண்டு வரை இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், 2025/26 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவை ஒப்பந்தங்களில் (கையெழுத்திடுவதற்கு முன்னர், அரச நிறுவனங்களிடமிருந்து விலை கோரல்கள் பெறப்பட்டன. அதன்படி, C/S ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனம் (C/S Rakna Lanka Security Company) ரூபா. 32,954,072.00 (VAT உட்பட) தொகையுடைய ஒரு விலைமனுவைக் கொடுத்திருந்தது. போட்டி விலைமனு அழைப்பின் (Competitive Bidding) பேரில், ரூபா. 24,679,110.00 என்ற குறைந்தபட்ச விலைமனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து உரிய சேவையைப் பெறுவதற்காக, பெறுகைக் குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்டது. பெறுகைக் குழு அறிக்கையின் பிரதி ஒன்று இத்துடன் அனுப்பப்படுகிறது. (இணைப்பு 02)

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் (National Audit Act No. 19 of 2018) 12 (உ) பிரிவில் (Section 12(ஏ) குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கு இணங்காத வகையில், பல்கலைக்கழகத்தின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனாலும், 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (Sri Lanka Ocean University Act No. 31 of 2014) 20 (2) (1) (எ) பிரகாரம், பல்கலைக்கழக பதவியணிக்கு உரிமையுள்ள ஏனைய பயன்களை அவ்வப்போது தீர்மானிக்கும் அதிகாரம் பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020/09/03 ஆம் திகதியிட்ட 44வது ஆளுகைச் சபையின் ஒப்புதலின்படி, தொடர்புடைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆளுகைச் சபையின் ஒப்புதலைப் பெற்ற கூட்டக் குறிப்புப் பிரதி ஒன்று இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது. (இணைப்பு 03)

2.3 **ஏனைய விடயங்கள்.**

(அ) தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் ரூபா. 300 மில்லியன் மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, ஓர் ஐந்து மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு

திட்டமிடப்பட்டது. அதற்கான ஆரம்ப நடவடிக்கையாக, மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன, அதற்காக கொடுப்பனவுகளும் செய்யப்பட்டன. அந்தப் பணிகள் 2016 ஆம் ஆண்டிலோ அதன் பின்னரோ ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், அடுத்தடுத்த ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

சலுகை அடிப்படையில் கடனுதவி மூலம் ஒரு கட்டிடத் தொகுதியைக் கட்டுவதற்கான முன்மொழிவு இருந்தது. இதற்காக, மட்டக்குளியில் உள்ள காக்கைதீவு வளாகம் மற்றும் 'நாரா' நிறுவன வளாகம் உள்ளடங்கலான முழு இடமும் முன்மொழியப்பட்டது. ஆனால், நாரா வளாகத்தில் சதுப்புநிலச் சூழல் அமைப்பு இருந்த காரணத்தினால், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை பெறுவதற்கு முடியவில்லை.

மட்டக்குளிய வளாகத்தில் தொழிற்பயிற்சிப் பிரிவும் இருப்பதால், பல்கலைக்கழகத்திற்கான கட்டிடத் தொகுதியைக் கட்டுவதற்கு 04 ஏக்கர் நிலப்பரப்பு போதுமானதாக இருக்கவில்லை. அதன் காரணமாக, சம்பந்தப்பட்ட அமைச்சு (Line Ministry) மூலம் ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது கட்டிடத் தொகுதியைக் கட்டுவதற்குப் போதுமான நிலப் பகுதி கண்டறியப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா. 300 மில்லியன் நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டடத்தின் கட்டுமானத்தை அதே ஆண்டில் ஆரம்பிக்க முடியவில்லை. மட்டக்குளிய பல்கலைக்கழக வளாகத்தில் போதிய இடவசதி இல்லாததன் காரணமாக, 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது. அந்த வாடகைக் கட்டடத்தைப் பயன்படுத்தியதன் மூலம், மாணவர்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், நூலகங்கள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் புதிய கல்விசார் பதவியணிக்கான இடவசதிகளை வழங்குவதற்கும் முடிந்தது.

தற்போது, அதிகரித்து வரும் மாணவர் கொள்ளளவின் அடிப்படையில், பல்கலைக்கழகத்திற்கு ஒரு கட்டடத் தொகுதி அத்தியாவசியத் தேவையாக உள்ளது. அதற்காக, ஒரு கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கு அல்லது ஓர் அரச கட்டடத்தைக் கண்டறிவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இது பல்கலைக்கழகம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சு (Line Ministry) ஆகியவற்றின் கவனத்தில் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) தற்போது, பட்டப்படிப்புப் பாடநெறிகளுக்கான மாணவர் சேர்க்கை தொடர்பான நடவடிக்கைகள் இந்தப் புதிய முறைமை மூலம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பாட்டு நிலையில் உள்ளன. இந்த முறைமையைச் செயல்படுத்துவதற்காகப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டாலும், தகவல்களை உள்ளீடு செய்து முறைமையை நடைமுறைப்படுத்தும் போது சிக்கல்கள் நிலவின. அதனால், இந்த முறைமையைச் செயல்படுத்துவதற்காகத் தனியானதொரு பிரிவை தாபிப்பதற்கும், இந்த முறைமைகளைச் செயல்படுத்துவது குறித்த அறிவுள்ள பதவியணியைச் சேர்ப்பதற்கும் தேவையான ஒரு முன்மொழிவு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த முறைமை குறித்து நிறுவனக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. இந்த முறைமையின் LMS (Learning Management System) பகுதியைக் கையாள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட அலுவலருக்கு முறையான வழிகாட்டுதல் வழங்கப்படாததால் இந்த நிலைமை ஏற்பட்டது. இதையடுத்து, அந்த அலுவலர் முழுநேரமாக இந்தப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.. மேலும், இந்த முறைமைக்கு அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணி நியமிக்கப்படும் வரை,

முறைமையை நிர்வகித்துச் செல்ல வேண்டிய அவசியத்தின் காரணமாக, ஒப்பந்த அடிப்படையில் ஒரு தகவல் தொழில்நுட்ப ஆலோசகரின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

(ஈ) இந்த நிலுவைத் தொகைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக, பல்கலைக்கழகம் பல தடவைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் (Audit and Management Committee) பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகப் பேரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்தது. அதேவேளையில், வசூலிக்கப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணங்களுக்கான ரூபா. 5,913,500.00 தொகையானது, அமைச்சரவைக் குறிப்பின் பரிந்துரைகள் மற்றும் ஒப்புதலின்படி செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆயினும், இன்றுவரை அந்த நிலுவைகளை நீக்கிக் கொள்வதற்கு (Writing off) தேவையான முறையான ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை. தீர்க்கப்படாத திரட்டிய செலவுகள் 2025 ஆம் ஆண்டில் நிதி ஒழுங்குமுறைகளின்படி செயற்படுத்தப்பட்டு, வருவாயுடன் ஈடுசெய்யப்படும்.

| விவரம் | 2024.12.31 ஆம் திகதியன்று பெறப்பட வேண்டிய நிலுவையின் மதிப்பு | தற்போதைய நிலை |
|---|---|---|
| Refundable Deposits (Electricity NARA) | 218,750 | நாரா நிறுவனம் வசம் வைக்கப்பட்டுள்ள வைப்புத் தொகையாகும். இது தொடர்பாக, அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய அறிக்கையின் மென்பிரதி கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| Advances | 4,164,447 | மேற்கூறிய அறிக்கையின் அடிப்படையில், இந்த நிலுவைத் தொகையிலிருந்து ரூபா. 3,742,167/- ஐ தீர்த்து வைப்பதற்கு, முகாமைத்துவச் சபையின் ஒப்புதலின் பிரகாரம், அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை இலக்கம் 01/2021 படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.. |
| Deposits (Hostel) | 1,660,000 | இந்த மதிப்புகளான ரூபா. 840,000.00-ஐ வசூலிப்பதற்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.<br><br>வினிவித்தாரண கட்டிடம் - ரூபா.480,000.00<br>பியசேன வீரதுங்க ஏக்கநாயக்க கட்டிடம் - ரூபா.330,000.00 |
| Course Fees Receivables-Higher education | 6,946,990 | இந்த நிலுவைத் தொகையிலிருந்து ரூபா. 5,913,500/- ஐ நீக்கிக் கொள்வதற்காக (Write-off), 2024.07.17 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பின் பரிந்துரைகள் மற்றும் ஒப்புதலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது." |
| Ceylon Oxygen House | 48,000 | தற்போதைய நிலையில் பேணப்பட்டு வருகிறது.. |
| Refundable Tender Deposits - Nara | 277,960 | தற்போதைய நிலையில் பேணப்பட்டு வருகிறது. |
| Advanced Payment Boossa - Stage 2 | 313,801 | வேலைகள் முடிக்கப்படவில்லை |
| Advance - Obtaining Fuel from Oriental Fuel station Mattakkuliya | 200,000 | தற்போதைய நிலையில் பேணப்பட்டு வருகிறது.. |

| | | |
|---|---|---|
| Fantence | 557,450 | வேலைகள் முடிக்கப்படவில்லை. |
| Constructions | 665,876 | வேலைகள் முடிக்கப்படவில்லை.. |
| Over Payment | 284,399 | வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| | **15,337,673** | |

(உ) தொடர்புடைய திரட்டிய செலவுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நிதி ஒழுங்குவிதி 570(3) இன் பிரகாரம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது, உரிய சீராக்கள்களுடன் சேர்த்து அவை சமர்ப்பிக்கப்படும்.

(ஊ) <u>32 பதவிகளுக்காக 158 ஊழியர்களின் பற்றாக்குறை நிலவுதல்</u>

- பல வருடங்களாக ஆட்சேர்ப்பு வரையறுக்கப்பட்டதாலும், ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாததாலும் ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது.
- மேலும், தொழிற்பயிற்சிப் பிரிவுக்கு DMS 30 இன் கீழ் சம்பளக் குறியீடுகள் அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சிக்கலான நிலைமையால், தொழிற்பயிற்சிப் பிரிவுக்கு கல்விசார் பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்ய முடியவில்லை."
- தற்போது, அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயல்முறையை மறுபரிசீலனை செய்தல் மற்றும் பதவியணி முகாமைத்துவக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 ஆலோசகர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்பயிற்சிப் பிரிவின் உதவி ஆலோசகர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாத காரணத்தினால், அந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், அந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்படுவதற்கான இறுதி கட்டத்தில் இருப்பதை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் வாய்மொழியாக அறிவித்துள்ளது.
- இன்று வரை, பல்கலைக்கழகம் அதன் உண்மையான பதவியணியை முகாமைத்துவம் செய்தும், வெளி இணைப்பு அடிப்படையிலும், ஒப்பந்த அடிப்படையிலும் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தும், அதன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. மேலும், திட்டங்களைச் செயற்படுத்தி, முன்னேற்றங்களை அடைவதற்குப் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

<u>8 பதவிகளுக்காக 37 ஊழியர்கள் அதிகமாக உள்ளனர்.</u>

**<u>நிர்வாகப் பிரிவு</u>**

- பல்கலைக்கழகத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கைக்குள், திட்டமிடல் பிரிவு (Planning Division), போக்குவரத்துப் பிரிவு (Transport Division) ஆகியவை அங்கீகரிக்கப்படாத காரணத்தினால், அந்தப் பணிகளையும் இந்த நிர்வாகப் பிரிவே நிறைவேற்றுவதற்காக இந்த அலுவலர்களின் சேவைகள் பெறப்பட்டுள்ளன.
- 8 பதவிகளுக்காக 37 ஊழியர்கள் அதிகமாக இருப்பதாகக் கூறும் ஆட்சேர்ப்பு குறித்த தகவலுடன் உடன்படவில்லை. இந்த 37 மேலதிக ஊழியர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள், தேசிய மீன்பிடி மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவனத்தின் (National Institute of Fisheries and Nautical Engineering - NIFNE) அலுவலர்கள்//ஊழியர்கள் பல்கலைக்கழகத்தில் உள்வாங்கப்பட்ட போது, தனிப்பட்ட வகையில் (Personal to Holder) என்ற அடிப்படையில் அல்லது தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவச்

சேவைகள் திணைக்களத்தின் உள்வாங்கல் ஒப்புதலின்படி உள்வாங்கப்பட்ட பதவிகள் ஆகும்.

- இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்குள், அந்தந்தப் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்கள், ஆட்சேர்ப்பு மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாத காரணங்களால், அந்தப் பிரிவுகளின் செயல்பாடுகள் மற்றும் கடமைகளைத் தடையின்றித் தொடர்வதற்காகவும், வருடாந்தச் செயல்திட்ட இலக்குகளை அடைவதற்காகவும் அந்த ஊழியர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

- தற்போது, அந்தப் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்ட பதவிகளுக்கு ஊழியர்களைச் சேர்த்த பின், அந்தக் குறைபாடுகளைச் சரிசெய்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(எ) வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள 08 பதவிகள், தேசிய கடல்சார் மற்றும் பொறியியல் நிறுவனத்தின் ஊழியர்களை இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் உள்வாங்கிய போது, 'தனிப்பட்டவருக்குரியது' (Personal to Holder) என்ற அடிப்படையில் அல்லது தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் உள்வாங்கலுக்கான ஒப்புதலின்படி, அந்தந்தப் பிரிவுகளில் நியமிக்கப்பட்ட) பதவிகளாகும்..

| தொடர் இலக்கம் | பிரிவு | பதவிகள் |
|---|---|---|
| 01. | மனித வளப் பிரிவு | உதவிப் பதிவாளர் |
| 02. | பரீட்சைப் பிரிவு | கல்லூரி ஆலோசகர் 02, தற்போது இராஜினமா செய்துள்ளனர். |
| 03. | மாணவர் விவகாரப் பிரிவு | உதவிப் பதிவாளர் |
| 04. | நிர்வாகப் பிரிவு | உதவிப் பணிப்பாளர் |
| 05. | பராமரிப்புப் பிரிவு | உதவிப் பதிவாளர் |
| 06. | உயர்கல்விப் பிரிவு | கல்லூரி ஆலோசகர் |
| 07. | தொழிற்பயிற்சிப் பிரிவு | கல்லூரி விரிவுரையாளர் |

(ஏ) நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவியணிக்காக இது ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஊழியர்களுக்கும் ஒதுக்கீடுகளைச் செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

சிரேஷ்ட பேராசிரியர் நளீன் ரத்நாயக்க, PhD,
துணைவேந்தர்,
இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்.

# 12 நிதி பகுப்பாய்வு - 2014 -2023 - 10 ஆண்டுகளிலான காலப்பகுதி

| தொழில்பாட்டு என்பன | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசாங்கத்தின் அளிப்புகள் மற்றும் மீண்டுவரும் செலவினம் | 105,000,000 | 139,000,000 | 175,000,000 | 247,161,000 | 309,048,000 | 325,340,000 | 377,767,500 | 375,333,000 | 404,580,000 | 500,000,000.00 |
| துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மீண்டுவரும் அளிப்புகள் | 3,203,725 | 3,689,750 | 9,115,566 | 17,775,769 | 5,260,073 | 4,177,597 | 6,365,418 | 1,187,393 | | |
| ஏனைய வருமானம் | 41,104,699 | 49,440,512 | 22,260,644 | 4,753,879 | 11,575,725 | 4,617,034 | 11,503,957 | 28,159,493 | 29,250,010 | 70,223,766 |
| அரசாங்கத்தின் அளிப்புகள் மீண்டுவரும் மற்றும் ஏனைய | | | | | | | | 2,884,115 | | |
| பிற்போடப்பட்ட வருமானத்திற்கான கடன் தீர்ப்பு சீராக்கல் | | | | 47,915,337 | 59,520,683 | 71,119,936 | 66,254,496 | 89,532,996 | 91,763,105 | 52,558,303 |
| மொத்த வருமானம் | 149,308,424 | 192,130,261 | 206,376,210 | 317,605,985 | 385,404,481 | 405,254,567 | 461,891,371 | 497,096,997 | 525,593,115 | 622,782,069 |
| மொத்த செலவினம் | 220,321,478 | 239,488,741 | 288,327,985 | 295,837,203 | 390,421,024 | 457,004,082 | 465,955,244 | 497,670,776 | 570,307,086 | 619,048,316 |
| ஆண்டுக்கான மிகை/பற்றாக்குறை | (71,013,054) | (47,358,479) | (81,951,775) | 21,768,782 | (5,016,543) | (51,749,515) | (4,063,873) | (573,779) | (44,713,971) | 3,733,753 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | | | | | | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | | | | | | | | | | |
| முடிவுறாத வேலைகள் - கட்டிடங்கள் | 413,101,215 | 434,871,745 | 437,451,967 | 525,409,154 | 592,759,143 | 648,761,979 | 682,851,212 | 628,033,936 | 2,197,272,747 | 2,128,008,592 |
| புலனாகாத சொத்துக்கள் | | | | | | | | | 61,855,799 | 64,665,583 |
| நிலையான வைப்புகள் | | | | | | | | | 7,460,979 | 5,710,506 |
| நடைமுறை சொத்துக்கள் | | | | | | 4,593,819 | 5,065,976 | 11,658,355 | 12,291,974 | 15,538,728 |
| பதவியணி கடன் | | | | | | | | | | |
| இன்வென்ட்ரி - காகிதாதிகள் | 7,299,959 | 6,456,621 | 8,507,849 | 12,008,231 | 12,540,685 | 13,167,510 | 15,195,354 | 12,627,161 | 13,189,183 | 13,959,113 |
| பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 1,330,395 | 1,810,331 | 1,088,162 | 1,024,689 | 1,799,717 | 1,422,223 | 1,747,782 | 570,731 | 1,918,570 | 1,624,343 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | | | | | | | | | 187,089 | |
| தொங்கல் கணக்கு | 23,016,165 | 27,986,450 | 27,992,790 | 63,306,415 | 77,829,168 | 32,654,272 | 60,926,113 | 34,261,785 | 22,376,953 | 25,997,939 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 85,433 | 85,433 | 85,433 | 85,433 | 85,433 | 85,433 | 85,433 | 85,433 | 85,433 | 85,433 |
| மொத்த சொத்துக்கள் | 1,447,272 | 20,530,849 | 32,097,454 | 3,262,800 | 15,479,150 | 15,589,028 | 15,579,135 | 30,877,801 | 16,534,868 | 69,288,990 |
| தேறிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் | 446,280,439 | 491,741,429 | 507,223,655 | 605,096,722 | 700,493,296 | 716,274,264 | 781,451,005 | 718,115,202 | 2,333,173,601 | 2,324,879,231 |
| மூலதன மற்றும் ஒதுக்கம் ( அபிவிருத்தி செலவு) | | | | | | | | | | |
| திரட்டிய நிதியம் | | | | | | 3,576,819 | 5,584,122 | 11,658,355 | 12,960,393 | 13,188,117.00 |
| ஏனைய அளிப்புகள் | 622,470,805 | 786,670,223 | 736,621,992 | 749,318,173 | 830,564,132 | 822,051,587 | 802,744,130 | 788,025,807 | 809,753,648 | 767,159,032.00 |
| நிபுணதா சவிய | | | | | | | | 14,234,250 | | 6,584,250.00 |
| koika அளிப்புகள் | | | | | | | | 1,628,640 | 5,076,864 | 623,000.00 |
| அரசாங்கத்தின் அளிப்புகள் Ahead | | | | | | | | | | 6,758,370.00 |
| திரட்டிய நிதியம் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் SSDP | | | | | | | | | | 9,770,280.00 |
| திரட்டிய மிகை /பற்றாக்குறை | | | 139,834,358 | 166,331,014 | 201,422,283 | 239,045,854 | 300,060,865 | 280,954,073 | 244,958,829 | 224,658,136.00 |
| மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் | (322,689,668) | (384,274,070) | (466,618,875) | (435,126,654) | (445,391,295) | (514,416,548) | (518,985,846) | (528,338,308) | (573,655,678) | (613,013,812.00) |
| பிணை முறிகள் செயலற்றதாக்குதல் | | | | | | | | | 1,673,211,343 | 1,735,344,388.00 |
| HOPE புலமை நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | 1,732,125 | 4,608,894.00 |
| உரித்துகளின் மொத்தம் | | | | | | | | | | 45,000.00 |
| நடைமு யைல்லாத பொறுப்புகள் | 299,781,138 | 402,396,152 | 409,837,475 | 480,522,533 | 586,595,120 | 550,257,712 | 589,403,271 | 568,162,817 | 2,174,037,524 | 2,155,725,655.00 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | | | | | | | | | | |
| நடைமுறைபொறுப்புகள் | 29,208,293 | 38,714,128 | 46,082,397 | 33,775,589 | 45,331,680 | 63,379,169 | 69,939,906 | 79,028,671 | 86,992,943 | 81,692,551.00 |
| திரட்டிய செலவினம் | | | | | | | | | | |
| செலுத்தப்பட வேண்டியவைகள் | 115,147,665 | 48,388,632 | 48,553,176 | 87,206,982 | 55,834,256 | 83,644,548 | 101,359,285 | 50,356,737 | 47,313,085 | 27,427,422.00 |
| கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடு | 2,143,344 | 2,242,517 | 2,750,608 | 3,591,619 | 13,002,239 | 18,993,833 | 20,748,541 | 20,566,974 | 14,721,063 | 14,709,513.00 |
| மூலதனமயப்படுத்திய நடைமுறை பொறுப்புகள் | | | | | | | | | 10,108,975 | 24.00 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | | | | | | | | | 23,278,137.00 |
| | | | | | | | | | | 22,045,928.00 |
| நடைமுறை பொறுப்புகளின் மொத்தம் | 117,291,009 | 50,631,149 | 51,303,784 | 90,798,601 | 68,836,495 | 102,638,381 | 122,107,826 | 70,923,711 | 72,143,123 | 169,153,575.00 |
| மொத்த பொறுப்பு | 446,280,439 | 491,741,429 | 507,223,656 | 605,096,723 | 700,763,295 | 716,275,264 | 781,451,005 | 718,115,201 | 2,333,173,601 | 2,324,879,231.00 |
| | | | | | | | | | | |